உ

ஸ்ரீராமஜெயம்.

மதுரை வில்வபிராம்மண மேட்டுத்தெரு

மகா-ள-ள-ஸ்ரீ

நா. நரசிம்மாச்சாரி அவர்கள் புத்திரரும்,

மகா-ள-ள-ஸ்ரீ

வ. அழகாச்சாரி அவர்களுடைய

சிஷ்யருமாகிய

மதுரை

நாராயணாச்சாரிசுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# நன்னூல் கட்டளை.

இது

நா. நரசிம்மாச்சாரி அவர்களால்,

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்,

பதிப்பிடப் பெற்றது.

1914

இதன் விலை] [அணா 1.

MADR
250/VII-1914

உ

ஸ்ரீராமஜெயம்.

மதுரை விஸ்வபிராம்ஹண மேட்டுத்தெரு

மகா-௱-௱-ஸ்ரீ

நா. நரசிம்மாச்சாரி அவர்கள் புத்திரரும்,

மகா-௱-௱-ஸ்ரீ

வ. அழகாச்சாரி அவர்களுடைய

சிஷ்யருமாகிய

மதுரை

நாராயணாச்சாரிசுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# நன்னூல் கட்டளை.

இது

நா. நரசிம்மாச்சாரி அவர்களால்,

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்,

பதிப்பிடப் பெற்றது.

1914

இதன் விலை] [அணா 4.

THE REGISTRAR ... APR 1914 MADRAS

உ

ஸ்ரீராமஜெயம்.

# முகவுரை.

—(o)—

திருக்கூடல் ஆலவாய்ச் சேத்திரமாகிய மதுரைமாநகரில் தெற்காவணிமூலவீதி விஸ்வப்ராம்ஹண மேட்டுத்தெருவில் வசிக்கும் சக்கிமங்களம் நாராயணாச்சாரி குமாரர்களில் சடாக்ஷாதியானம் செய்துகொண்டுவந்த நரசிம்மாச்சாரியாகிய எனக்கு ஆண்சந்ததியில்லாததினால் 1893வருஷத்துக்கு நந்தன௵ பைங்குனி௴ குமரக்கடவுள் பிரசன்னமாகி உனக்கு ஆண்சந்ததி கொடுக்கிறேன். எனக்கு மூன்றுரூபாய்க்கு வேல் செய்துவை என்று உத்திரவளித்தார். அதே கெர்ப்பமாகி ௸ 1893-ம்௵த்துக்கு விஜய௵ மார்கழி௴ 9௳ வெள்ளிக்கிழமை மிருகசீருஷ நக்ஷத்திரம் ரிஷபலக்கினத்தில் பூலோக சிசுதையமாகி நாராயணசுவாமி ஆச்சாரி யென்ற நாமதேயம் பெற்று வளர்ந்துவரும் நாளில் குலத்தொழில் பயிர்த்தொழில் யாவற்றிலும் விருப்பமற்று வேதாந்தவிஷயத்தில் விருப்பமுற்று, 1913-ம்௵த்துக்கு பிரமாதீச௵ ஐப்பசி௴ முதல் இப்பாடலைப்பாடி கார்த்திகை௴ 16௳ பாடலை முடித்து விட்டு தேகசவுக்கியமில்லையென்றுசொல்லிப் படுத்துக்கொண்டு 19௳ வியாழக்கிழமை இரவு 2 மணிக்கு தாயாரையும் அத்தையாகிய ஆயி அம்மாளையும் தன்பக்கத்தில் இருக்கச்சொல்லி தாயாரைப்பார்த்து உனக்கும் எனக்கும் பற்று அற்றுப்போகவேண்டும். நான் உன் மகனில்லை. நீ என் தாயாரில்லை. நீயும் அப்படிச் சொல் என்று சொல்ல, நான் எப்படி மனந்துணிந்து சொல்லுவேனென, இது சமயம் நீ மனந்துணிந்து கட்டாயமாய்ச் சொல்லத்தான் வேண்டுமென்று சொல்ல, அப்படியே தாயார் மூன்றுதரம் சொன்னவுடன் மறுபடியும் தாயாரைப்பார்த்து நீ மாமனார் பேர் சொல்லக்கூடாது

என்று நினையாமல் என்னுடைய பேரை நாராயணா! நீ அந்தக் கிரு[illegible]ணனோடு[illegible]க கலந்துகொள். ஹர ஹர மஹாதேவா என்று 3 தரம் சொல் என, தாயாரும் அந்தப்படி 3 தரம் சொன்னவுடன் ஆபிஅம்மாள் அத்தையைப் பார்த்து சுப்ரமணியர் மயில்வாகனத்தில் வந்துவிட்டார். நீ கந்தர் ஷஷ்டிகவசம் பாடு என்று சொல்ல, கந்தர் ஷஷ்டி கவசம் பாடிமுடிந்தவுடன், புண்ணியவான் குடியிருந்த கோவிலானது கொதிக்கும். நீ நித்தியம் வேதாந்தத்தை அவளுக்குப்தேசம்பண்ணி அவளுடையமனவருத்தத்தை நிவிர்த்தி செய் என்று அங்கமாளுக்கு சொல்லி உடனே நாளை வெள்ளிக்கிழமை விமானம் வந்துவிடும், நான் விமானத்தில் ஏறிக்கொண்டு சடத்தைப் போட்டுவிட்டு கிருஷ்ணனுடன் போய்க் கலந்துகொள்வேன். சடத்தை லெக்ஷாதி லெக்ஷம் பெயர்கள்வந்து பார்ப்பார்கள். என்னை நீங்கள் பார்க்கவேண்டுமானால் என்னுடைய பஜனைக்கூடத்தில் கிருஷ்ணனுடைய படத்தருகில் என்னுடைய படமிருக்கும். பார்த்துக்கொள்ளுங்கள். என்று சொல்லிவிட்டு மறுநாள் 20-ம்உ யாகிய வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு அடங்கிவிட்டார். அவர் பாடலை யாவருமுணர்ந்து மோக்ஷாநந்தம் அடையும் பொருட்டு அச்சிட்டுப் பஹிரங்கம் செய்திருக்கிறது.

சுபமஸ்து.

---

☞ நா. [illegible]சிம்மாச்சாரி.

உ

சிவமயம்.

# நன்னூல் கட்டளை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
14 APR 1914
MADRAS.

## விநாயகர்.

மோகமெனுங்கடல்கடந்து முத்தியெனுங் கரைகாண்பான் முதிர்ந்தநாலாம்
பாதமெனு மலர்கொண்டு பத்தியெனும் புனலாட்டிப் பரிந்துசாத்திப்
சோகமெனப் பாவித்துத் துரியமெனும் விளக்கேற்றிச் சோக நீங்கி
யாகமெனுங் கோயிலின்கண் அறிவென்னுங் கணபதிக்கே அன்புசெய்வாம்

மூஷிக வாகனனே முக்கண்ணன் மகனே
வாசிகைவ சப்படுத்தும் வல்லவனே—நேசித்தால்
அல்லலொடு துன்பம் அறுத்து ஒழிப்பவனே
தும்பிக்கை யானே துணை.

## சுப்பிரமணியர்.

ஆறு முகமுண்டு பன்னிரு தோளுமுண் டங்கையினி
லேறிய வேலுமுண்டு வெற்றி மயிலுமுண் டேவல்செய்ய
மீறிய சிங்கத் துரைவீர வாகுண்டு வேலைக்கிங்கே
கூறியபோது வருவான் குமர குருபரனே.

## சிவதுதி.

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங் கொன்றையந்தார்
தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச்
சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு மகனாகி
மீன நோக்கின்
மடவாலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை
வணக்கஞ் செய்வாம்.

## விஷ்ணு.

வெண்ணெயள்ளி யுண்டவனே வேணுகோ பாலனே
தண்ணளி யளிக்கும் தயாபரனே—என்னை
உனக்கடிமை யாக வுட்படுத்து வாயேயென்
மனக்கவலை அப்பவன்றோ மாறும்.

கள்ள மனதுகின்பாற் கஷரந்தருகப் பெற்றேனே
உள்ளபடி யுன்னை யுணர்ந்திலேனே—தெள்ளமுதே
அற்ப சுகத்தில் அலைந்தே னளவில்பிறப்
புற்றேன் விதியோ வுரை.

---

# நன்னூல் கட்டளை.

## 1-வது அத்தியாயம்.

---

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

குற்றமில்லாத மெய், வாய், கண், மூக்கு, செவிகளினுறும் சப்த பரிச, ரூப, ரச, கந்தமென்கிற பஞ்ச விஷயங்களோடு கூடி ஞான இந்திரியங்கள் செவ்வையாயிருப்பினும் பிரயோஜனமில்லையாம் ஏனெனில், எட்டுக் குணங்களையுடைய கடவுளது பாதாரவிந்தத்தை வணங்காத சிரப் பிரதானமாகிய உடல் முழுதும் அந்தக்கரணமுதலிய சர்வத்திர விஷயங்களும் பிரயோஜனமில்லையாம். தலையே நீ வணங்காய் என்று தேவாரத்திலும் சொல்லியிருக்கிறது. ஆகையால் இளமைப் பருவத்தில் தானே நாம் கடவுளை வணங்கிப் பெருமையடைவதே மேன்மையாகும். நாம் கடவுளை வணங்கி முன்னுக்கு வர இஷ்டமிருப்பின் நாம் நம்முடைய முக்கியமான கதவுகள் நான்கையும் மூடி வைத்திருந்து வேண்டுமான சமயங்களில் திறந்து கடவுளைத் துதித்துப் புகழவேண்டும். அப்படிப்பட்ட கதவுகள் நான்கையும் இன்னதென ஆராய்வோம். முதலாவது: நமது கண்களையாம். ஏனெனில், அலங்காரம் கூத்து ஸ்திரி வீண்கதை

சிற்றின்பப்பாடல் முதலியவைகளில் கண்ணை உபயோகப்படுதலால் நாம் நம் கண்களைப் புண்ணாக்கிக் கொள்கிறது மல்லாமல் ஆபத்திற்கு உதவக்கூடிய பொருளையும் இழந்து தரித்திரர் ஆவோம். இரண்டாவது: நம் வாயேயாம். ஏனெனில், இதுமகா பொல்லாத வாசல். ஆகையாலே தான் "பல்லக்கு ஏறுவதும் வாயாலே, பல் உடைபடுவதும் வாயாலே" என்று பழமொழியும் வழங்குகின்றது. ஆதலால் வசை வழக்கு வாது கோள் புறணி இவைகளுக்கிடமில்லாமல் வாய்ப்பூட்டைப் பூட்டி வைத்திருந்து வேண்டுமான வேளைகளில் திறந்து கடவுளைத் தியானிக்கவேண்டும். மூன்றாவது: நம் காதுகளேயாம். ஏனெனில், துஷ்டர் ஆலோசனைகளையும் துன்மார்க்கர்களுடைய சிற்றின்பப் பாடல்களையும், கெட்ட சங்கதிகளையும், கோள் முதலிய கெட்ட பேச்சுகளையும் கேட்க விருப்பமுள்ளவைகளாயிருக்கும். நாமதற்கு இடங்கொடுப்போமானால் கேட்டுக்குள்ளாக்கிவிடும். நான்காவது: எல்லாவற்றிற்கும் மேலான சிரசின் மூலமாய்த் திறக்கும் மனக்கதவே. இவ்வாசல் மிகவும் விரிவுள்ளது. ஒருநாழிகையாவது அடைத்துக் காக்க முடியாது. நாம் அதை அறிவினால் பழக்கத்தில் அடைத்தாலன்றி இலேசில் அடைபடாது. ஆகையால் நாம் இப்பெருங் கதவுகளை யடைத்து அறிவினால் கடவுளைத் துதிப்பதே மேன்மையாம்.

### நாம் கடவுளை ஏன் வழிபடல் வேண்டும் என்பது:—

நாம் கடவுளை வழிபடுவதற்காகவே தான் நமக்குப் பஞ்ச இந்திரியங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எதற்காகவெனில், அவனைப் பிரதிதினமும் பார்த்து ஆனந்திக்கக் கண்களும், பிறருக்குச் சுமையாயிராமல் நாமே நடந்து சென்று ஆலயத்திற்குப் போகக் கால்களும், பக்திரசமுள்ள புராணங்களைக் கேட்டுச் சந்தோஷிக்கக் காதுகளும், கடவுள் மீது பேசவேண்டிய இன்பகரமான சங்கதிகளைப் பேச வாயும், மூக்கு முது நா[illegible]றைந்த முக்கண்ணனாகிய தன்னை முகரவும் கொடுத்திருக்கிறார். நாம் நம் உறுப்புக்களை யெல்லாம் மேலே சொல்லியபடி கடவுள்விஷயத்தில் செலுத்தாவிடத்துப் பிரயோசனமற்றவையாகும். "காதினுக்கேயறன் காதைகள் கேட்டிமீதே கனகபூஷணம்" என்னும் பாட்டினாலு மறியலாமன்றோ?

---

## 2-வது அத்தியாயம்.

## பலதிரட்டு.

---

என்னுடை மனது புந்தி யிந்திரி யங்க ளைந்து
மென்னுடை யறிவு யாவு மிரவிமு னிமமே யாக்கி
யென்னுடை நீயு நானு மேகமென் றைக்யம் செய்ய
வென்னுடைக் குருவாய்த் தோன்று மீசனை யிறைஞ்சி னேனே. (1)

புத்தியொடு முத்திதரும் புண்ணியத்தா லன்றியே
மத்தமிகு பாவத்தில் வாழ்வோமோ—வித்துபயிர்
தாயாகி யேவளர்க்கும் தண்புனலா லல்லாது
தீயால் வளருமோ செப்பு. (2)

பூட்டைத்தி றப்பதுங் கையா லேமனப்
பூட்டைத்தி றப்பது மெய்யாலே
வீட்டைத்தி றக்கத்தெ ரியா மல்விட்ட
விதியி தென்கிறார் ஞானப் பெண்ணே. (3)

குலங்கெட்டுப் பாசங் கெட்டுக் கோத்திர பேதங் கெட்டு
மலங்கெட்டுக் கோபம் கெட்டு மங்கையர் ஆசை கெட்டுத்
தலங்கெட்டுந் தானுங் கெட்டுத் தனக்குளே வெறும்பா ழாக்கிப்
பலங்கெட்டுச் சத்ய நாதர் பதங்கொள்வார் பெரியோர் நெஞ்சே.

மின்மினிப் பூச்சி தன்னுண் மெய்யொளி கண்டாற் போல
உன்மனத் தொடுங்கி யேயுள் ளொளியைநீ கண்டாற் பின்னைச்
சென்மமு மில்லை யந்தச் சிவத்துளே சேர்வாய் நாளும்
பொன்மகள் புகழும் சத்ய நாதரைப் போற்று நெஞ்சே. (5)

பொறிவழி யலைந்து மீளும் புலன்களை யடக்கி ஞான
அறிவெனும் விழியி னாலே யம்பர வெளியைப் பார்த்து
உறிதனி லிருக்குங் கள்ளை யுண்டுதற் போதம் விட்டு
நிலைதரு சத்ய நாதர் நிலைமைகண் டறிவாய் நெஞ்சே. (6)

அஞ்சருளைப் போற்றி யைந்துபுல னைத்தொலைக்க
நெஞ்சே யுனக்கு நினைவுநான் சொல்லுகிறேன்

வஞ்சகத்தை நீக்கி மறுநினைவு வாராமல்
செஞ்சரணத் தாளைநீ சிந்தனைசெய் வாய்நெஞ்சே. (7)

கல்லான நெஞ்சே கவலைக் கருத்தாகிப்
பொல்லாப் பவக்கடலிற் போகாதே—எல்லாம்
ஜெலக்குமிழி யென் றுநினை செம்பொன்னி னம்பலத்தைக்
கலக்கமறப் பார்த்தே கரை. (8)

இத்திக்குந் தேனைத் தெவிட்டாத தெள்ளமுதை
முத்திக்கு வித்தான முப்பாழைப் போற்றாமல்
பற்றிப் பிடித்துநான் பாசத்திற் கட்டும்வண்ணம்
சுற்றி யிருக்கும்வினை சூழ்ந்தனையே நெஞ்சகமே. (9)

உன்னரிய நெஞ்சே ஒள்ளியபால் தன்னை
அன்னந்தண் ணீர்நீக்கி யுண்ணுந்—தன்மைபோல்
துன்பங் களைத்தொலைத்துத் தூயவெளி யூடுருவா
இன்பங் களைச்சேர்ந் திரு. (10)

தானந் தவமுயற்சி தாடாண்மை யோடுநெஞ்சே
வானந் திறந்து வழிகூடி—நாளுமதில்
நீயு மொருநிழலில் நின்றங் கிளைப்பாறித்
தோயுமதி தானே தொடங்கு. (11)

புத்திதரும் வித்தைதரும் பொல்லாப்பில் லாமல்நெஞ்சே
சித்திமுத்தி பேரின்பம் சேர்ந்திடலாம்—நித்தநித்தம்
தானந்த மானதொரு சற்குருவே டேபழகி
ஆனந்த முண்டிருக்கலாம். (12)

எந்தஎந்தக் காலத்தில் எந்தஎந்தக் காரியத்தை
எங்கெந்த வாறு யியற்றுவையோ—அந்தக்
காலத் ததுவதுவாய் வந்தே கருணைசெய்வாய்
கோலத்தைக் கொண்டகுருவே. (13)

நிதியாக வந்த குருநாத னேநின் வரவையின்றிப்
புதிதாக வொன்றுங் கருதாத வண்ணம் புகுந்துநின்றாய்
கதியாகக் கொண்டுட் பதியாமல் நின்னைக் கழலவிட்டால்
மதிகேட ரென்ன பயனடை வாரிந்த மாநிலத்தே. (14)

தலமொன்று காட்டி யெனக்குட்டந் தாயத் தலந்தனிலென்
புலன்களொன் றாகிப் புகுகின்ற வேயப் புலன்களையான்
சலமென் றெண்ணி யகந்தையி னாற்சற்றுத் தொட்டுவிட்டாற்
பலபல வாய்வெளிப் பாய்கின்ற வேயிவ் வுபாயமென்னே. (15)

உபாயங்கள் கோடி யடியவர்க் காகவே யுண்டுபண்ணித்
தபாமலெல் லாரையுந் தன்னுடன் கூட்டிடத் தக்கவனே
அபாத்திரம் பாத்திர மென்பதெல் லாம்நின் னருட்குமுண்டோ
அபாத்திர நம்பா தவர்பாத் திரம்நம்பு மன்பர்களே. (16)

கரைந்து கரைந்தழு முள்ளன்பி னோர்கள் கருத்திலெல்லாம்
விரைந்து விரைந்தெழு மானந்த மென்னும் விளக்கொளியை
வருந்தி வருந்தியுங் காணுக் குருட்டு மனங்களெல்லாந்
திரும்பித் திரும்பி மாயையி லேவிழச் செய்கின்றவே. (17)

கற்கண்டோ தேனோ கனிரசமோ பாலோவென்
சொற்கண்டா தேதெனநான் சொல்லுவேன்—விற்கண்ட
வானமதி காண மௌனிமௌ னத்தளித்த
தானமதி லூறுமமிர் தம். (18)

செல்லுங் கதியொன்று மில்லையென் பாருஞ் சிறிதுமப்பிச்
சொல்லும் பொருளுஞ் சுமந்துழல் வாருங் கதிப்படைந்தே
புல்லுங் கிழங்கும் புசித்துநின் றுலு[illegible]வதெங்கே
அல்லும் பகலு முருகிநின் றுல்வரு மானந்தமே. (19)

அல்லும் பகலும்பே ரன்புடனே தானிருந்தாற்
கல்லு முருகாதோ கன்னெஞ்சே—பொல்லாத
தப்புவழி யேநினைந்தாய் தானென்று நீயிறந்து
வெப்பிலே யானந்த மே. (20)

ஓரம லேயொருக்கா லுண்மை யுள்ளொளியைப்
பாராம லுள்ளபடி பார்த்திருந்தால்—வாராதோ
பத்துத் திசையும் பரந்தெழுந்தா னந்தவெள்ளந்
தத்திக் கரைபுரண்டு தான். (21)

துன்பக் கடலில் தோய்ந்ததெலாம் தீர்ந்ததே
இன்பக் கடலி லிருமென்ன—அன்பிற்

கரைந்து கரைந்துருகிக் கண்ணருவி காட்ட
விரைந்துவரு மானந்த மே. (22)

மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சி
மயானத்தான்வார்சடையானென்னினல்லான்
ஒப்புடையனல்லனொருவனல்ல
னோரூரனல்லனோருவமனில்லி
அப்படியுமந்நிறமுமவ்வண்ணமு
மவனருளேகண்ணாகக்காணினல்லால்
இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த
னிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே. (23)

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டு
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்போல் மணியினை யெய்தவொண் ணாதே. (24)

வல்லன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போல நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்' என்ற பாடல்களாலும் அறியாமலன்றோ?

பாசமானது தண்ணீரைக் கெடுப்பது போலவே காமமானது மனத்தை மூடிக்கொண்டு விளங்கவிடுகிறதில்லை. இன்னும் மனிதராகிய நாம் தேகத்தினிடத்தும், உண்ணும் பொருள்களிடத்தும் ஆசைவைத்து வீணே நம் காலங்களைப் போக்குகிறோம். நாம் படும் ஆசை இவ்வளவு அளவுதான் இருக்குமென்று சொல்லமுடியாது. "ஆசைக்கோரளவில்லை" அன்றியும் தாயுமானவர் "பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை யருள்வாய்" என்று கூறியிருக்கிறார். இன்னும் மனிதரிற் பலர் பிறரை இரக்ஷித்தல், உயிர் ஓம்பல், ஈந்துண்டல் முதலிய நற்கருமங்கள் இல்லாதவராய் இருக்கிறார்கள். எவரொருவர் வீடு, மாடு, ஆடு, பணம் உடையவர்களைப் பெரியவர்களென்று எண்ணுகிறாரோ அவர் தவறு செய்தவராவர். எவரொருவர் ஆசையின்றித் தன் மனதை ஒரே வழியாகக் கடவுள்மீது செலுத்துகிறாரோ அவரே பெரியவராவர்.

பணக்காரர்கள் பெரியவர்களாக மாட்டார்கள். "ஆருக்குப் பொன்னம்பலம் கிருபை இருக்குதோ அவனே பெரியவனும்" என்பதனாலும் அறிக. இன்னும் பணக்காரர் பெரியவரில்லை என்பதற்குக் காரணமும் ஆராய்வோம் "அருளில்லார்க் கவ்வுலக மில்லை" யென்றது போலவே பணமானது கடவுளிடத்துக்குக் கொண்டு போகக் கூடிய பொருளன்று. ஆனால் கடவுள் மீது செலுத்திய அன்போ இவனை விடாது தொடர்ந்து செல்லும். மனத்தி லுண்டாகிய குப்யங்களையும் வியாதிகளையும் போக்கிக் கடவுளுடைய திருவடிகளையே காண்கிறவனாகிறான். அவன் யாருக்கும் நல்லவனாகி முடிவில் வீட்டை அடைவா னென்பது நிச்சயம். இதைப் பெரிய புராண மென்னும் திருத்தொண்ட புராணத்தால் நன்கு அறியலாம். கடவுளை நாடிப் பணிந்திடுமாந்தர்கள் கோபத்தைத் தொலைத்தல் அவசியம். கோபமானது நல்லதல்ல. மகா கொடியது. குடிகளைக் கெடுத்துவிடும். ஒருவரையும் முன்னுக்கு வரவொட்டாது. கோபம் பிறர் நம்மைவந்து நாடாதபடி செய்துவிடும். நல்ல மனதிலுள்ள தெய்வபக்தி, கருணை, ஈகை, முதலியவைகளைப் போக்குவதுடன் நரகக்குழியில் தள்ளிவிடும்படி எமனைத் தூண்டுகிறபடியால் கோபத்தை யடக்கவேண்டும். அப்படி யடக்கினால்தான் பின்னிருக்கும் பக்தியால் கடவுளை வணங்கி நன்மை யடைவோமாதலால் கோபத்தை யடக்கிக் குணத்துடன் கடவுளைத் துதித்தல் அவசியம்.

கடவுள் நமக்கு இந்திரியங்களைக் கொடுத்திருக்கிறார். அவைகளை ஜனங்கள் அறியாதபடி பல பல இடங்களில் தங்கள் தங்கள் இஷ்டப்படி செலுத்தித் துன்பமடைகின்றார்களே யொழிய கடவுளின் விஷயத்தில் நிறுத்தி ஆதனால் வரும் சுகத்தை விரும்பாது மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை இவைகளிடத்தில் இச்சை வைத்து வீணே தங்கள் காலங்களைப் போக்குகிறார்கள். சிலர் தங்களுடைய இளமை நீங்கியபின் முதுமையில் கடவுளை வணங்கிச் சிறிது பயன்மாத்திரம் அடைகிறார்கள். இன்னும் சிலர் தங்களுடைய வாள்நாட்களில் ஒருநாள்கூட தன்னைப் படைத்த கடவுளைத் துதிசெய்து வணங்க இஷ்டமில்லாதவர்களா யிருக்கிறார்கள். யோசித்துப் பார்க்குமிடத்தில் அவர் நமக்குப் பூமியையும் அதை

கன்றுப் அலங்கரிக்கச் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் முதலியவைகளையும் கொடுத்த தன்றி மனிதர்களையும் உண்டுபண்ணி அவர்களுக்கு உபயோகமாக்கிக் கொள்ளும் பொருட்டு அநேக யோனி பேதமுள்ள பிராணிகளையும் படைத்திருக்கிறார். அவருடைய பிள்ளைகளாகிய நமக்குக் கொடுக்கப்பட்ட வேலைக்காரர்கள் பஞ்சபூதங்களே. தேகமில்லாமலிருந்தும் சகல ஜீவன்களுக்கும் தேகங்களைக் கொடுப்பவரும் தாமுண்ணாமல் மற்ற உயிர்களை உண்பிப்பவரும் அவரே. இன்னும் எங்கும்நின்று நாம் செய்யும் சகல காரியங்களையும் எள்ளுக்குள் எண்ணெய் நிறைந்திருப்பது போலவே எங்கும் நிறைந்து இருந்துகொண்டு உள்ளவாறு பார்த்துக்கொண்டு இருப்பவரும் அவரே. அதுவும் தவிர இந்த மானிடர்கள் செய்யும் நல்வினை தீவினைப்பயன்களை உள்ளங்கைநெல்லிக்கனிபோல உள்ளவாறு உணர்ந்து அவ்வவற்றிற்குத் தக்கதாகிய பலன்களைத் திரும்ப ஊட்டுகிறவர் அவரேயன்றோ? அவரன்றி ஓரணுவும் அசையாததாகும் அல்லவா? சர்வ நாயகனும், முக்தனும், முதல்வனும், தில்லையம்பலத்தில் ஆடுகிறவனும் அவனேயன்றோ? இன்னும் அவன் சர்வலோக நாயகனாகவும், நெற்றிக்கண் நிமலனாகவும், திரிபுரமெரித்தவனாகவும், பக்தர்களுக்காகத் திருவிளையாடல் செய்த திருநீலகண்டனாகவும் உள்ளவனன்றோ? அந்தச் சாம்பசிவத்தை நாம் தேடியாடிப் பணியாமல் இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையை மெய்யென்றெண்ணுகிறோமே, இது பிசகல்லவா? ஏனெனில் இந்த உலக நடையானது ஒரு கனவேயாம். கனவில் உண்மை போலவே தோன்றிப் பொய்யாய்விடுகிறது. அதுபோலவேநாம் அநேக காலம் இருப்போமென்ற நினைப்பெல்லாம் "தூங்கையிலே வாங்குகிற மூச்சு, சுழிமாறி வாங்கையிலே போனாலும் போச்சு" என்பது போலாகவே முடியும். நம்முடைய ஆசையெல்லாம் வீணாய்ப் போய் விடுகிறது. இன்னும் அரசர்களென்றும் குடிகளென்றும் பெரியவனென்றும் சிறியவனென்றும் பெற்றவனென்றும் பிள்ளைகளென்றும் பந்தம் பாராட்டுகிறோமேயன்றி அவைகளையெல்லாம் கொடுத்த கடவுளை வணங்குகிறோமில்லை. ஒவ்வொருவரும் சம்சார சாகரம் என்ற பெரும் சுமையைச் சுமந்துகொண்டிருக்கிறோம். அதிலே கிடந்து வருந்துவது மிகுந்த கஷ்டமாயிருக்கிறது. இரு

ந்தபோதிலும் அதிலேயிருந்துகொண்டு தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் கண்டுபிடிக்க வேண்டும். அப்படி ஒருவன் கண்டுபிடிப்பானானால் தன்னை அறியக்கூடியவனாகி பிறகு தன்னையறிந்த பயனாலே பிரம்மமாய்ப் பிறப்புத் தீர்வான். அவன்தான் இச்சையற்றவனாகக் கருதப்படுவான். அவனுக்குத் தான் ஆசையால் உண்டாகிய துன்பம் கிடையாது. ஆகையினாலே தான் பரமானந்த தீபத்திலும், "இச்சையற்றோர்க் கின்பமில்லை துன்பமில்லை" யெனக் கூறினார். இன்னும் மனிதர்கள் பணச் செருக்குடையவர்களாயிருக்கிறார்கள். பணம் விரைவில் அழிந்து போகும். பணமுடையவர் ஈகையுடையவராயிருத்தல் அவசியம். ஈகையில்லாதவர் பிரயோசனமற்றவராய்ப் பலராலும் இகழக்கூடியவராவார்.

---

## 3-வது அத்தியாயம்.

---

காலன் றனையுதைத்தான் காமன் றனையெரித்தான்
பாலன் பசிக்கிரங்கிப் பாற்கடலை—ஞாலமெச்சப்
பின்னை நடக்கவிட்டான் பேரருளை நாடாதார்க்
கென்னை நடக்கை இனி• என்று தாயுமானவர் சொல்லுகிறதைக் கவனித்து நாம் அவசியம் அவனருளைத் தேடவேண்டும். அவர் நமக்கு உயிரையும் உடலையும் உலகையும் தந்திருக்கிறார். பகவானில்லையேல் உலகிருப்பது அரிது. உலகில்லையேல் ஜனங்கள்கிடையார். ஆகையால் நாம் முதலில் நன்மை செய்கிறவராகிய கடவுளைத் துதிக்க வேண்டும். அப்படிக் கடவுளைத் துதித்தால் தான் நாம் மோட்ச பதவியை அடைவதற்கு ஏதுவாகும். பின் நாம் பக்தி செலுத்தும் மேன்மையினால் பிறவிப் பெருங் கடலைக் கடக்க முடியும். இன்னும் நாம் அவருடைய புகழை விரும்பினால் நல்வினை தீவினைப் பயன் நம்மை வந்து அடையாது. நாம் நம்முடைய ஐம்பொறிகளினிடத்துமுள்ள சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமாகிய இவைகளை ஒழிக்க முயன்றால் நம்முடைய மனக் கவலைகளெல்லாம் இலேசில் மாறிவிடும். கடவுள் இந்தப் பூமியையும் அதை நன்றாய் அலங்கரிக்க சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் முதலியவைகளையும் கொடுத்து உலகத்தை ரக்ஷிப்பதுமன்றி ஜனங்க

ளையும் உண்டு பண்ணி தன்னை வந்து பணியுமாறு அருள்காட்டியிருக்கிறானன்றோ? "தலையே நீ வணங்காய்" என்பதனாலும் அறிக. இன்னும் ஒவ்வொரு உறுப்பையும் அவர் விஷயத்தில் உபயோகித்தலே மேன்மை. தலையை மேலே சொல்லியதுபோல வணங்கும் விஷயத்திலும், கண்ணைப் பிரதிதினமும் லிங்கமூர்த்தியைத் தெரிசிக்கும் விஷயத்திலும், காதை இன்பரசமுள்ள தேவாரம் திருவாசகம் திருவிளையாடற்புராணம் பெரியபுராணம் திருவாய்மொழி முதலியவைகளைக் கேட்கும் விஷயத்திலும் உபயோகப்படுத்துதலே மேன்மை. அப்படி முடியாவிடினும் நம் உறுப்புக்களைச் சிறிதுநேரமாயினும் அவர் விஷயத்தில் உபயோகப்படுத்துதலே மேன்மை. இன்னும் கடவுள் முதல் கடையின்றி ஆண் பெண் அலியெனும் பேதமின்றி அழியாமல் இருக்கப்பட்டவர். அவரைக் காண்பதற்குப் பிரயாசையின்றி முடியாது. ஞான இந்திரியங்களாலும் தேடரிய இலாக்கியம் பெற்ற அரூபியாயிருக்கிறார்.

2. அறிவினால் உருகித் தேடும் அன்பர்களுக்குளெளிதிற்காணக்கூடியவராயிருக்கிறார். அவரைக் கண்டு தெரிசித்தலும் அரிது. ஆனது பற்றியே "ஆரேனு மன்புசெய்யி னங்கே தலைப்படுங்காண், ஆரேனுங் காணா அரன்" என்று பெரியாரும் கூறியிருக்கிறார்கள். இன்னும் பக்தர்களெல்லாம் மேலுலகத்தில் பகவானைத் துதித்துக்கொண்டு அல்லும் பகலும் துக்கமின்றிச் சுகமாயிருக்கிறார்களல்லவா? எங்கும் நிறைந்த பிர்மமாய் இருந்துகொண்டு மானிடர்கள்செய்கின்ற நல்வினை தீவினைகளுக்குத் தக்கதாகிய பலன்களைத் திரும்பக் கொடுப்பவனும் அவனே யன்றோ?

நாம் புலை, கொலை, களவு, கள், காமம் இவைகளைத் தவிர்த்து, சாதுக்களைப் போற்றி அவரை வணங்கினால் சந்தோஷமும் நம்பிக்கையு முண்டாகும். படித்த வித்வான்களாயிருப்பினும் கடவுளைத் துதியா விடத்து, கல்வியால் உண்டாகும் பயனை அடையார். யாரேனும் அவரைத் துதிப்பார்களேல் எல்லா உலகத்திலும் சிறந்த மோக்ஷ உலகத்தில் நீடூழி காலமாகப் பிறவிச் சங்கடமின்றிச் சுகமாக வாழ்வார்கள். யாதொரு கவலையும் மறலி இம்சையுமின்றிச் சுகமாக இருக்கலாம். இன்னும் கெட்டவர்களுடைய புத்திமதியைக் கேட்காமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும்,

கடவுளிடத்திலேயே பக்ஷமாயிருந்து அல்லும் பகலும் சிந்திக்கிற மனிதர்களே பாக்கியவான்கள். இன்னும் யோசித்துப் பார்க்குமிடத்து கடவுள் எல்லாம் தானாய் இருக்கிறார் அன்றோ? இதனை

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி வயிரமுமா மாணிக்கந் தானே யாகிக், கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக் கலையாகிக் கலை ஞானந் தானே யாகிப், பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணு மாகிப் பிரளயத்துக் கப்பாலோ ரண்ட மாகி, எண்ணாகி எண்ணுக்கோ ரெழுத்து மாகி பெழுஞ்சுடரா யெம்படிக ணின்ற வாறே.
என்பதனால் அறிக.

---

## 4-வது அத்தியாயம்.

## நட்பு.

---

நட்பாவது இரண்டு மனிதர் ஒன்றுபடச் சிநேகித்தலாம். அப்படிச் சிநேகிப்பதனால் வலிமை அதிகம் உண்டாகும். ஒரு சிறு விறகுக்குச்சி இலேசாக ஒடிக்கக்கூடியதாயும், பல குச்சிகள் சேர்ந்த விறகுக் கட்டு ஒடிக்கக்கூடாததாயும் இருப்பதுபோலவே நாம் தனித்திருப்பின் எளியவனொருவன் நம்மைச் சூழ்வில் வென்றுவிடுவான். நாம் நல்லார் பலருடன் சிநேகம் செய்துகொண்டால் வலியர் வந்து எதிர்ப்பினும் கஷ்டமில்லை. அவ்வலியவரையும் இலேசாக வென்று விடலாம். மனிதர்கள் தேடவேண்டிய முதற்பொருள் நட்பே. ஒருவரோடு நாம் நட்புச் செய்யு முன்னமேயே அவருடைய் குணம் செயல் இவைகளை நன்றாய் ஆராய்ந்து குணசாலிகளுடனே நட்டல் வேண்டும். அப்படி ஆராயாமற் செய்யும் விஷயத்தில் பிராண சங்கடம் அவசியம் நேரிடும். இத்தகைய நட்பு ஆராய்தல் மனிதர்களுக்குப் பிறவிக்குணமாக உண்டாகக் கூடியதேயொழிய தானாக்கிக் கொள்ள முடியாது. ஆனால் முயற்சியால் ஆக்கிக் கொள்ளலாம். அறிவோருடனே நாம் நட்புக்கொண்டால் சந்திரன் எப்படி அமாவாசை மூன்றாம் தினம் முதல் பௌர்ணமி வரை எப்படி வளர்ந்து கொண்டு வருகிறானோ அப்படியே என்றும் அது பெருகிக்கொண்டிருக்கும். அப்படிச் செய்யாமல் கீழாருடன் சிநே

கித்தால் நீர்வாழும் பறவைகள் குளத்தில் தண்ணீருள்ள போது இருப்பதும் பின் வற்றி வறண்ட காலத்தில் நீங்குவதும் போல் நம் கையில் திரவியம் உள்ளபோது சிநேகித்து செல்வம் நீங்கியபோது நாமும் இவனை விட்டு நீங்குவோமென்று அகன்று விடுவார்கள். இப்படிப்பட்ட சிநேகிதர் நட்புக்குரியவரல்லர். அவருடன் நட்புக்கொள்ளுதல் துன்பம் விளைவித்துக் கொள்வதற்குத் தான்.

ஆனதுபற்றியே "நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும்" என்று ஒளவைப் பிராட்டியாரும் கூறியிருக்கிறார் அல்லவா? பிரயோஜனமற்ற நாரும் பூவுடன் சேர்த்துத் தொடுக்கப்படின் யாவரும் விரும்பி ஏற்றுக் கொள்வதைப் போல கீழ்மக்களும் மேலோருடன் கூடின் மேலோராக மதிக்கப் படுவர். முகச் சிநேகிதம் போல் பாராட்டுகின்ற வெளிச் சிநேகம் கூடாது. உள்ளன்போடு உபசரித்தலே மேன்மை.

அவ்வாறு சிநேகித்தால் தான் துன்பமெல்லாம் ஒழிந்துச் சுகமடைய ஏதுவாகும். நாம் பலருடன் பகைக்கினும் பகைக்கலாம். ஆனால் நல்லாராகிய பெரியோர்களுடன் பகைத்தல் கூடாது. "நல்லார் தொடர்க்கைவிடேல்" ஏன்பதனாலும் அறிக. நல்லார்களுடனே சேர்ந்தால் நன்மை அடைவோமே யன்றி துன்பம் அடையமாட்டோம். நண்பர்களில் ஒருவர் அடையும் சுகதுக்கம் மற்றவர்களுடையதே. இவர்கள் வேறுபடின் கன்றைப் பிரிந்த பசுப்போல கதறுவார்கள். நாம் அந் நல்ல சிநேகிதர்களுடன் வெறுப்புக்கொண்டிருப்பினும் நமக்கு நல்லறிவைப் புகட்டிச் சீர்திருத்தி விடுவார்கள். இப்படிப்பட்ட சிநேகிதரைத் தான் ஆபத்தில் உடுக்கை யிழந்தவன் கைபோல உதவுவார்கள் என்று பெருமைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. ஆகையால் கடவுளருளால் நாம் நல்ல சிநேகிதர்களை அடைவோமாக.

---

## 5-வது அத்தியாயம்.

# ஜீவகாருண்யம்.

---

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தாம்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

ஜீவகாருண்யம் என்னவெனில், பிற உயிர்களிடத்துக் கருணை கூர்ந்து காப்பாற்ற வேண்டுமேயன்றி எப் பிரயோஜனத்தை யிட்டும் கொல்லுதல் கூடாது என்பதேயாம். இதைப் பிறருக்கு அறிவிக்கும் பொருட்டு ஞானச் சுருதிகளை நன்குணர்ந்த தாயுமானவரும் "கொல்லா விரதம் குவலயமெல் லாமோங்க, எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே" என்று கூறியிருக்கிறார். ஆகையால் நாம் பிறர் பொருள் ஆசையும் பிரஜீவஇம்சையும் செய்யாமல் இருக்கவேண்டியதவசியம். கொலை செய்யாமலிருப்பதே அறங்களிலெல்லாம் மேலான அறம். அது துறவிகளுடைய மார்க்கங்களி லெல்லாம் சிறந்தது. நாம் முத்தியடையும் மார்க்கங்களில் அநேக மிருப்பினும் கொல்லாமை மார்க்கமே சிறந்தது.

எவரொருவர் இவ்வழியை அநுட்டித்து வருகிறார்களோ அவர் முத்தி வீட்டை அடைவரென்பது நிச்சயம். அன்றி ஜீவ இம்சை செய்பவர்களுக்குச் சோறு கிடைப்பதரிது. பூமிக்குப் பாரமேயன்றி சுகமில்லை. ஊனைத் தின்று தன் சரீரத்தைப் பெருக்கச் செய்பவர்களிடத்து அருள் கிடையாது. அருளில்லையேல் ஜீவகாருண்யம் அவர்களிடம் காண்பதரிது. ஜீவகாருண்யம் இல்லையேல் முத்தி யுலகு கிட்டாது. ஆகையால் பிறஜீவன்களிடத்து அன்பு வைத்துக் காப்பது நமது கடமையாகும்.

---

## 6-வது அத்தியாயம்.

# இல்லறம்.

---

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ளல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

அறம் எனில் தர்மம் எனப் பொருள்படும். இல்லறமெனில் காதலன் மனையாளோடு கூடி இருவரும் மனம் ஒத்துச் செய்யும் அறமாம். இன்னும் அறம் இல்லறம், துறவறம் என இரண்டுவகை யுண்டு. இங்கு கூறுவது இல்லறமேயாம். இல்லறத்தைச்செய்து கடைபோக முடிக்க வேண்டி யிருப்பின், நற்குணமுள்ள மனைவி நமக்குப் பூர்வ புண்ணியத்தால் கிடைத்திருக்க வேண்டும். அப்படிக் கிடைக்காவிடின் இல்லறம் செவ்வனே நடத்த முடியாது. பின் புருஷனும் மனைவியும் எப்படி யிருக்க வேண்டுமெனில், இரண்டு மாடுகள் பூட்டிய ஒரு வண்டியானது எப்படி இரண்டு மாடுகளும் ஒத்து இழுத்தாலன்றி குறிப்பிட்ட இடம் போய்ச் சேராதோ அதுபோலவே இருவருடைய கருத்து வேறுபாடா யிருப்பின் நாம் முன்னே சொன்ன இல்லறம் என்னும் வண்டி செவ்வனே நடைபெறாது. இல்லறத்தானே சந்நியாசி, பிர்மச்சாரி, வானப்பிரஸ்தன் இவர்களுக்கு முக்கிய துணையாகின்றான். இன்னும் துறந்தவர்களுக்கும் வறுமையாளர்களுக்கும் பிச்சையெடுப்பவர்களுக்கும் இல்லறத்தானே துணையாகின்றான். பசியால் மெலிந்து வருந்துவோர்க்கு உணவளித்தலும் ஆடையின்றி வருந்துவோர்க்கு ஆடை ஈதலும் நோயாளிக்கு மருந்தளித்தலும் இல்லறத்தாருடைய கடமையாம். நன் மனைவியையுடைய குணசீலனே இல்லறத்தைக் கைக்கொண் டொழுகுவான்.

மற்றவர்கள் பூனைவாயிற்பட்டுவிழிக்கும் எலிபோலவும் பாம்பின் வாய்த் தேரை போலவும் அவஸ்தைப்படுவார்கள். பாவத்திற்குஉட்படாமல் புண்ணியத்தைக் கைக் கொண்டொழுகுவதே இல்லறத்தாருடைய கடமை. இல்லறத்தைத் தர்ம சிந்தையோடு நடத்துபவன் துறவியாய்ப் போக வேண்டிய தவசியமில்லை. இன்னும் இல்லறமெனும் நல்லறத்தையே நூல்களிலெல்லாம் சிறப்பாகக் கூறியிருப்பதால் அதைக் கைப்பிடித்தவன் மறு ஜென்மத்தில் தேவனாகிறபடியால் இல்லறத்தை ஒவ்வொருவரும் கைக்கொண் டொழுகவேண்டும்.

---

## 7-வது அத்தியாயம்.

# ஆசை விலக்கல்.

---

நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

என்ற நீதி நெறிவிளக்கத்தின் பாட்டுப்போலவே நம்முடைய இளமைப்பருவமானது. எப்படித்தண்ணீரில் குமிழிகள்வந்துவந்து மறைகின்றதோ அதுபோலசொற்பகாலத்தில் முதுமையாக மாறிவிடுகிறது. செல்வமானது ஓரிடத்தில் தங்கியிராததினால் அலைகளுக் கொப்பிட்டார். உடம்பு இன்றைக்கிருக்கும். நாளை ஜீவன் மாறிவிட்டால்பிரயோஜனமில்லை. ஆகவேதான் யாக்கையை நீரிலெழுத்துக்கு ஒப்பிட்டார். இன்னும் நம்முடைய இளமை செல்வம் யாக்கை முதலியவைக ளெல்லாம் அழிந்துபோவதால் அழிபாவஸ்துவாகிய கடவுளை திரிபுடியென்னும் மண் பெண் பொன் முதலிய ஆசைகளைப்போக்கி வைராக்கியத்துடன் துதிப்பது அவசியம். ஆசையானது மனிதர்களுக்கு அளவிடக் கூடாததாய் இருக்கிறது. உள்ளதைக்கொண்டு சந்தோஷமடைவதில்லை. எதுகிடைத்தாலும் போதுமென்று நினையாமல் வேறொன்று இல்லையே யென்று மனம் வருந்த வேண்டியிருக்கிறது. இது தான் பேராசை. இதுவெகு சீக்கிரத்தில் மனிதர்களைக் கெடுத்துவிடும்.

ஒருபொருளை நினைத்து வருந்தினாலும் அப்பொருள் கிடையப்பதரிது. ஒருவேளை அப்பொருள் கிடைப்பினும் கிடைக்கும். ஒருபொருளை நினைக்காம லிருக்கும் போதே அப் பொருள் நமக்குக் கிடைப்பினும் கிடைக்கும். இவையெல்லாம் வல்லவனாகிய கடவுளருளினால் நடப்பதன்றி நம் பேராசையினால் ஒன்றும் நடப்பதரிது. ஆகையால் நாம் மூன்று பெரியஆசைகளை முற்றும் அறுக்காவிடினும் நம்மால் கூடிய அளவு ஒழித்தல் அவசியம்.

## மண்ணாசை யொழித்தல்.

மண்ணாசை யொழித்தலெனில், நாம் நம்முடைய வீடு நிலம் பணம் ஆடு மாடு முதலியவைகளைப் பிறருக்குக் கொடுத்து விட்டு நாம் தெருவில் திரிந்துகொண்டும் பசியோடு வருந்தியும் இருக்கவேண்டிய தவசிய மென்பதில்லை. வீட்டில் இருந்துகொண்டும் நம்முடைய சொத்துக்களைக் காப்பாற்றிச் சாப்பிட்டுக் கொண்டும் சுகமாயிருக்கலாம். ஆனால் பிறர் மண்ணில் ஆசைவைக்கலாகாது. ஆனது பற்றியே மானிட உருவாய் வந்த சரஸ்வதியாகிய ஔவைப்பிராட்டியாரும் "மண்பறித்துண்ணேல்" என்று கூறியிருக்கிறார். ஆகையால் நாம் பிறர்மண்ணில் ஆசைவைத்தலை ஒழிக்க வேண்டும்.

## பெண்ணாசை ஒழித்தல்.

பெண்ணாசை ஒழித்தலெனில், கடவுள் சாக்ஷியாகவும் சூரியன் சந்திரன் அக்கினி சாக்ஷியாகவும் கைப்பற்றிய வாழ்க்கைத் துணை நலமாகிய நன்மனைவியை ஒழித்துவிடவேண்டுமென்பது அவசியமில்லை. ஆனால் கண்டவிடமெல்லாம் நமது கண்ணைச்செலுத்திப் பிறர் பெண்களிடத்து இச்சைவைக்க வேண்டாமென்பது தான். காமங்கொண்ட மனிதன் அல்லது ஸ்திரி தாம்கொண்ட காமச்சேஷ்டையைப் பிறர் மூலமாய்க் கழிப்பார்களேல் துன்பம் அவசியம் நேரிடும். காமச்சேஷ்டையைக் கண்ட விடமெல்லாம் செல்ல விடுதலே கஷ்ட காலத்திற்குக்காரணம். அப்படிப்பட்டவர்களுக்குப் பயம் அதிகம்.

(1) தன் மனப்பயம், (2) பாராவது இஷ்ட மனிதர்கள் காணில் பயம், (3) ஓரிடத்தை நாடிச்செல்வதற்குப் பயம், (4) ஓர் இடத்தை நாடிச்சென்ற பிற்கு அங்கு தனக்கு ஏதாவது ஆபத்து வருமோ என்ற பயம். ஆகையால் நாம் பிறர் பெண்கள்மீது செலுத்துகிற ஆசையை யொழிக்கவேண்டும்.

## பொன்னாசை யொழித்தல்.

பொன்னாசை யொழித்தலெனில், பண ஆசையைவிட்டு விடுதலாம். பொன்னாசை யொழித்தலெனில் நாம் நம் பொருள்களையெல்லாம் பிறர்க்குக் கொடுத்துவிட்டு ஒரு பைசாகூட இல்லாத

தரித்திரராய் இருக்கவேண்டியதில்லை. நாம் நம்முடைய பொருள்களை வைத்துக்கொண்டு சுகமே காலங்கழிக்கலாம். ஆனால் வீண் செலவு செய்யலாகாது. பிறர் பொருளாசையும் கூடாது. இன்னும் நாம் பொருளீட்டுதலில் பொய் சூது மோசமின்றி யிருக்க வேண்டும்.

ஆனால் வேதாந்த விஷயத்திற்கு மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை விலக்கல் எப்படியெனில், மேலே சொன்னப்டி இருந்து கொண்டு புளியும் தோடும்போலவும் கிளிஞ்சில் வெள்ளி போலவும், தாமரையும் நீரும்போலவும் பற்றற்றிருப்பதேயாம்.

ஒருவர் நோயாயிருந்தால் பித்த உபாதியால் எப்பேர்ப்பட்ட நல்ல உணவும் கசக்குமல்லவா? அப்பேர்ப்பட்டவருக்கு அவுஷதத்தினால் சௌக்கியமானால் எதையும் நன்றாய்ப் போசிப்பாரன்றோ? வியாதியஸ்தரென்னும் பெயரும் போய்விட்டதல்லவா ? ஆகையால் ஆசை வலைக்குளகப்பட்டவன் வியாதியஸ்தனென்றும் ஆசை யொழித்தவன் சொஸ்தவாளியென்றும் கூறலாம். ஈடணத்திரயமே ஆசையாம். தனேடணம் தாரேடணம் புத்திரேடணம் என்று ஈடணை கூறப் பட்டுள்ளன. இதில் தனேடணம் என்னவெனில்; ஒருவர் பணம் இல்லாத காலத்தில் பணம் இல்லையே யென்ற துக்கம், தனார்ச்சித காலத்தில் சம்பாதிக்கும் துக்கம், பின் விரயகாலத்தில் மிகுந்த துக்கம், திருடர் பெண்சாதி புத்திரர்கள் எங்கே அபகரித்துக்கொள்வார்களோ வென்றபயம்.

தாரஈடணம் என்னவெனில், ஸ்திரி போகத்தை விரும்பினவனுப் சுநக சூகரம் போல காமாதி தூரந்தரனுப் பெண்களின்மேல் ஆசைப்பட்டு அவர்கள் வலையிற்சிக்கி அவர்களால் போகிப்பதற்காகக் கூலிவேலை கிருஷி சேவகாதி இவைகளுக்கு உடன்பட்டு சதா துக்கத்தில் மூழ்கினவனுப் இருத்தல்.

புத்திர ஈடணம் என்னவெனில், நமக்குக் குழந்தைகள் இல்லையே யென்ற துக்கம், பிறந்து அங்கங்கள் ஈனமாயிருப்பின் அவ்விதத்தில் துக்கம். வித்தை கற்காவிடின் துக்கம். துர்ப்புத்தியுள்ளவனென்று யாராவது கூறின் துக்கம். விவாகம் செய்யவேண்டு

மென்ற துக்கம், காமாதி தாரந்தனுப் இருப்பின் தமக்கு இழிவு
ருமென்ற துக்கம். தமக்கு விரோதமாகச் சண்டைக்குக் கிளம்பு
னேல் துக்கம். ஒருவேளை தனக்கு முன் மரண மடைவானேல்
க துக்கத்திற்களவேயில்லை.

ஆகையால் ஈடணாத்திரயங்களை விலக்கி, தேகாபிமானத்
தப் போக்கினவன் திரிகால ஞானியென்று சொல்லப்படுவான்.

ஒளவையார் வாக்கியம்,

தலறம் தீவினைவிட் டீட்டல் பொருள் எஞ்ஞான்றுங்
க லிருவர் கருத்தொருமித் — தாதரவு
ட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
ட்டதே பேரின்ப வீடு.”

ஏழைகளுக்கு கோதான பூதான வஸ்திரதான அன்னதான
ன்னிகாதான முதலியவைகளைச் சற்பாத்திரமறிந்துகொடுத்தலும்,
ஞ்சாக்ஷர செபமும், பக்தி செலுத்தலுமாம்.

மோசமின்றிப் பொருள் சம்பாதித்து முன்சொல்லிய தர்மங்
ளைச்செய்து முடித்து விருத்தாப்பியகாலத்திற்கு வேண்டுமென்று
ர்த்துவைப்பதேபொருளாம்.

வேசி தாசி பிறர்மனைவி விதவை முதலியவர்களுடைய ஆசை
யையொழித்து அக்கினிசாக்ஷி வேதப்பிராமணர் சாக்ஷியாக தா
ம் தகப்பனும் தாரை வார்த்துக் கொடுக்கத் தானும் தன் மாதா
தாவும் ஏற்றுக்கொண்ட தர்மபத்தினியைக் கூடிப் புத்திர பௌத்
ரர்களை அடைவதே இன்பமாம். புளியும் தோடும் போல குடும்
பத்தில் பற்றின்றி நதியைக் கடக்கின்ற வரைக்கும் தோணியைக்
கைவிடாதது போல சீவன் பிர்மத்தில் ஐக்கியமாகும் வரை சதா
ஞானப் பார்வையோடு எப்போதும் இருப்பவனே பட்டினத்தடிக
ளும் “அறிவோ டிருந்திரு வாதனையற் றிறந்தான் பெருமையை
என்சொல்லு வேன்கச்சி யேகம்பனே” எனக்கூறினார். இன்
னும் பெண்சாதி பிள்ளைகளிருக்கும் வீட்டை விட்டுவிட்டு ஏகாந்தி
யாகக் காட்டில் திரிதல், பிச்சை யெடுத்தல், பூணூல் முதலியவை
களை அகற்றிவிட்டு காவிவஸ்திரத்தோடு வயிறுவளர்த்தல் மட்டுமே
தொழிலாகவுடைய மனிதர்கள் மிருகங்களே யாவர். ஏனெனில்,
அவைக்குரிய இலக்கணங்கள் அவரிடத்தில்லாமையே காரணமாம்.

8—வது அத்தியாயம்

# உண்மையுணர்தல்.

காக முறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடக்குதையோ வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே.

நாம் பூரணப் பொருளாகிய கடவுளை வணங்காமல் காலங் கழிக்கிறோம். நிலையற்ற வஸ்துக்களை யெல்லாம் நிலையுடையன வென்று கூறுகிறோம். அப்படிக் கூறுவதால் நமக்கு அவை களின் பேரில் ஆசையுண்டாகிப் பிறவித் துன்பங்கள் வந்து சேர ஏதுவாகிறது. முதலில் செல்வத்தைப் பற்றி ஆராய்வோம். அது அலைகள் போல வரும். பின்பு வெகு சீக்கிரத்தில் போய்விடும். ஆகையால் நம் கையில் பணம் உள்ளபோதே அறஞ் செயல் வேண்டும். இனி நம் தேகத்தைப் பற்றி ஆராய்வோம். இன் றைக் கிருக்கும். நாளை அழிந்து போகும். ஆகையால் நம் சட மூள்ள போதே அறம் செய்ய வேண்டிய அவசியம். உலகைப்பற்றி ஆராய்வோம். உலகத்திற்கும் ஜனங்களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? உயிர்க்கும் உடலுக்கும் கூட தொடர்பின்றி இருக்கி றோம். அதை நாம் ஒரு நாளிலேனும் நினைக்கிறோ மில்லை. அளவிலா எண்ணங்களை யெல்லாம் எண்ணிக்கொண்டு பொறிகளைக் கண்ட விட மெல்லாம் செலுத்தித் துன்ப மடைகிறோமே யொழிய கடவுள் விஷயத்திற் செலுத்தி இன்ப மடைகிறோ மில்லை. ஜனங்களுக்கும் பின் உலகு நசித்து விடுகிறது. மனிதர்கள் மனம் வாக்குகளைச் செவ்வையாய் வைத்திருப்பார்களேல் (1) புகழோங்கி விடும். (2) பற்றற்று விடும். (3) கோபம் இவர்களிடம் காண்பதரிது, சாந்த குண மெனப் படும் [illegible] குணத்தில் இருப்பார்கள். (4) ஆணவத்தை நீக்கி விடுவார்கள். (5) மனத்துறவுடையவர்களாய் முத்திக்கு வித்தாய் முளைந்து விடுவார்கள். (6) ஞானமார்க்கத் தை யுடைய யோகிகள் ஆவார்கள்.

ஞான மார்க்கம் செவ்வையாய்த் தெரியாதவர்க்கோ புலன்கள் தாமே யடங்கியும் பிரயோசனமில்லை.

அப்படி மனத் துறவு கொண்டவர்களுக்குக் காமம் வெகுளி மயக்கம் கூடாது. பக்குவா பக்குவ மறிந்து சாதுக்கள் உறுதி மொழிகளை உபதேசிக்கின்றார்கள். பின் இவர்களுக்கு நிஷ்டையில் தோன்றும் ஆனந்தமே சுகமாகத் தோன்றுமே யன்றி, இந்த உலக இன்பமெல்லாம் துன்பமாகவே தோன்றும். ஜீவமயமா யிருக்கும் பிர்ம சொரூபானந்தத்தை யறிந்து, தூங்குகிறவர்களுக்கு ஞானச் சுழுத்தி என்னும் உள்ளத்தில் தோன்றும் ஆனந்தமே ஞானமாம், அதில் வரும் அனுபவங்களெல்லாம் சச்சிதானந்தமாம்.

"ஐயந் திரிபின் றளர்ந்துத்தி யிற்றெவிந்து
மெய்யுணர்ச்சி கண்விழிப்பத் தூங்குவர்—தம்முள்ளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்த்தப் பொருள்.—(நீதிநெறி விளக்கம்)

இன்னும் ஏகாக்ஷரம் த்வியாக்ஷரம் அஷ்டாக்ஷரம் சடாக்ஷரம் என நான்கு விதம். ஏகாக்ஷரம் எனில் பிரணவ மந்திரமாகிய ஓம் என்பதுவாம். த்வியாக்ஷரம் உம். சடாக்ஷரமென்றால் பிரணவத் தோடு கூடிய சிவ பஞ்சாட்சரமாம். அஷ்டாக்ஷரமெனில் நாராயண மந்திரமாம். மேலே சொல்லியவைகளைச் செவ்வையாய்க் குரு வருளால் அடைவது ஞானம். இந்த ஞானம் இடைவிடா விசா ரத்தால் வரும். ஆதையால் நாம் ஏக வஸ்துவாகிய பிர்ம சொரூபா னந்தத்திற்குப் பக்தி செலுத்தவேண்டும், பக்தி செலுத்தினல் முத்தி யடையலா மன்றோ?

9—வது அத்தியாயம்.

## தத்துவ உற்பத்தி.

தத்துவம் 96-ல் (1) சுத்ததத்துவம் (2) ஆத்மதத்துவம் (3) அனாத்மதத்துவம் என மூவகைப்படும்.

சுத்ததத்துவம்:—ஞானசக்தி.

ஆத்மதத்துவம்:—பூதம் பொறி புலன் கர்மேந்திரியம் கர்ம விஷயம். (5) ஆக 25 ம் கரணம் 4. உள்ளம் 1 ஆக 30 ம் ஆத்ம தத்துவமாம். மற்ற 66 தத்துவங்களும் ஆத்மதத்துவமாம்.

"மண்ணாதி யைந்தொடு புறத்திலுள கருவியும்
வாக்காதி சுரோத்ராதியும்
வளர்கின்ற சப்தாதி மனமாதி கலையாதி
மன்னுசத் தாதியுடனே
தொண்ணூறொ டாறுமற் றுள்ளனவு மௌனியாய்ச்
சொன்னவொரு சொற்கொண்டதே
தூவெளிய தாயகண் டானந்த சுகவாரி
தோற்றுமதை யென்சொல்லுவேன்
பண்ணாரு மிசையினொடு பாடிப் படித்தருட்
பாலநெறி நின்றுதவரூப்
பக்குவவி சேடராய் நெக்குநெக் குருகிப்
பணிந்தெழுந் திருகைகூப்பிக்
கண்ணாறு கரைபுரள நின்றவன் பரையெலாம்
கைவிடாக் காட்சியுறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே." என்று
தாயுமானவரும் கூறியிருக்கிறாரன்றோ?

நாம் இப்பாட்டின் கருத்தை ஆராய்வோம். பஞ்சபூதங்களும் அதன் புறக்கருவிகளும் ஞானேந்திரியம் 5ம் சப்தம் முதலான விஷயம் 5ம் மனம் முதலான காரணம் 4ம் வித்தியாதத்துவங்களாகிய காலம் நியதிகலை வித்தை இராகம் புருடன் காந்தாரி என்று சொல்லப்பட்ட 7ம் சுத்ததத்துவம் முதலாகியவைகளுடன் 96 எனக் கூறினார். இன்னும் பக்குவமுள்ள அடியார்களைக் கைவிடாதவரென்றும் கூறினார்.

## உற்பத்தி.

சுத்த பிர்மத்திலே அக்கினியின் சூடுபோல பின்னமில்லாத சக்தி ஒன்றுண்டு. அதிந்தப்பிர்மத்தில் அடங்கி யிருக்கும்போது சுத்த பிர்மமென்று பெயர். சத்து சித்து ஆனந்தத்தோடுகூடிய ஓங்காரமே, திரிபுவனசுந்தரியாம். மூலப்பிரகிருதியின் சத்துவம்ரசம் தமம் என்னும் முக்குணத்தில் சத்துவத்தில் சத்துவம் உலகத்தை இரக்ஷிக்கும் விஷ்ணுவாயும், சத்துவத்தில் ரசம் உலகத்தைச்

சிருஷ்டிக்கும் பிர்மாவாயும், சத்துவத்தில் தமம் உலகத்தைச் சங்காரம்பண்ணும் ருத்திரனையும் உண்டாயினர். மூலப்பிரகிருதியின் ரசகுணத்தின் சத்துவம் தத்துவ ஞானியாயும், ரசகுணத்தின் ரசம் தர்மகாமநிஷ்டனையும், ரசகுணத்தின் தமம் காமக்குரோத ஆஷிரமம் உடையவனையும் உண்டாயினர். தமகுணத்தின் சத்துவம் மானிட ஜந்தாகவும் ஐராவதம் காமதேனு கருடன் இடபம் சங்கநிதி பதுமநிதி முதலியவைகளாகவும், தமகுணத்தின் ரசம் பசு, பக்ஷி முதலியவைகளாகவும், தமம் நாய் பன்றி கிருமி புல் முதலியவைகளாகவும் பிரதிபிம்பித்தன. இவ்வாறு தோன்றிய ஜீவேஸ்வர முதலிய சகலமும் உள்ளளவும் கருமத்தை நடத்தி பிரளய காலத்தில் மூலப்பிரகிருதியில் அடங்கி மூலப்பிரகிருதி சகிதம் சுத்த பிர்மத்தில் சேரும். இதில் பின் தோற்பத்தி மானிட ஜென்மத்தைப்பற்றி அறிந்த அளவிலே வரைகின்றன. ஒருவன் சடமெடுத்துக் கர்மங்களை அனுபவித்துச் சடத்தைச் சடமாகப் போட்டுவிட்டு ஆத்மாவைச் சூரியனிடத்துச் சேர்த்துச் சூரியனாலேயே மேகத்தில் கொடுக்கப்பட்டுப் பின் அவ்வாத்மாவே வருஷவிந்துவாக மழைபொழிந்து அதனுதவியால் தானிய மூலமுண்டாக அதை ஜந்து பொசித்து ஆண் ஜெந்துவினுடைய சுக்கிலவிர்த்தி பெண் ஜெந்துவினுடைய கர்ப்பத்திற் கலந்து கருத்தரிக்கின்றன. ஐந்தாம் நாள் நீர்குமிழியாகவும் ஒருமாதத்தில் சிரசு தோன்றியும், இரண்டாவது திங்களில் அவயவங்கள் தோன்றியும், மூன்றாவது திங்களில் தோல் நரம்புகள் தோன்றியும், ஐந்து மாதத்திற்குள் சகல அவயவங்களும் சம்பூர்ணமாகி உயிரும் தோன்றும்.

8-வது திங்களில் ஞானம் தோன்றும், பின் பூர்ண கெர்ப்பமாகி மாதாவின் பிராணவாயுவினால் தள்ளப்பட்டு ம[illegible]யினின்று விழும் பூச்சிபோல அண்டத்தைச் சிரசினால் பொத்து யோனிவழியாய்ப்பிறந்து குழந்தை யௌவனம் கிழத்தன்மை இவைகளடைந்து எக்குணத்தில் தோன்றிற்றோ அக்குணத்திலேயே லயிக்கும். இதில் காரணகுரு கடாக்ஷத்தால் சமாதியை யடைந்து சென்ம சாபல்ய மடைவதுமுண்டு. துஷ்டச்சேர்க்கையினால் காமாதி தூங்காரனாய்ச் சென்மம் கீழாகி புனர் சென்மத்திற் கேவலமனிதனாயும்

நாய் பன்றி முதலிய ஜந்துவாகி நல்வழிக் கரை காணாமல் அதோகதியாவதுமுண்டு. இதில் மானிடசரீரம் எடுத்தால் இடைவிடாமுயற்சியால் ஈடணையாகிய மண், பெண், பொன்முதலான ஆசைகளை நீக்கி ஆத்மதரிசன மெனும் பேரின்ப வெள்ளத்தை யடைவதே மேன்மை.

## 10-வது அத்தியாயம்.

# ஆத்மா, அநாத்மா.

---

ஆத்மா, அநாத்மா என இரண்டு உண்டு. தூல், சூக்கும, காரண மென மூன்று சரீரங்களுண்டு. இவைகளை யறிவதே தேகத்திரயமாம். தூலதேகம் ரத்தம் தோல் எலும்பு நரம்பு தசை இவைகளுடனே கூடியதாம். சூக்கும சரீரம் ஞானேந்திரியம் 5 கர்மேந்திரியம் 5 வாயு 5 கரணம் 4 இவைகளுடனே கூடியதாம். காரணசரீரம் இரண்டு சரீரத்திலும் புழுதையிற் பாம்புபோல 96 தத்துவங்களையும் ஒன்றோடொன்று தொகுதியாகச் சம்பந்தப்படுத்துவதாம். தூலதேகமோ அன்னமயம், சூக்கும சரீரமோ பிராணமயம் இம்மூன்று சரீரமும் ஆத்மா அன்று. அன்னமயகோசத்தினால் தூலசரீரமாம். உண்ணும் ஜலம் முக்கூறும். முதற்கூறு மூத்திரமாம். நடுக்கூறு தசைக்கிடமாம். கடைக்கூறு பிராணாதாரமாம். உதராக்கினி உண்ணும் உணவு முக்கூறும். முதலாவது தேகத்திற்கும் இரண்டாவது வாயுவி[illegible]கும் கடைக்கூறு பிராணனுக்கு மாயிருப்பதால் அன்னமய கோச[illegible]தோடு கூடிய தூலசரீரம் ஆத்மா அன்றென்று பெரியோர்களால் விலக்கப்பட்டிருக்கின்றது. பிரத்தியக்ஷமாய்க் கண்ட[illegible]தையும் கேட்டதையும் அனுபவித்ததையும் நித்திரையிலே தூ[illegible]சரீரம் அறியாமையினாலேயே தூலசரீரம் பொய்யென்று இ[illegible]திரிபற அறியலாம். சூக்கும சரீரம் 24 தத்துவங்களோடும் நிச[illegible]மாக அனுபவிக்கிறது போல பொய்யாகக் காண்கிறது. ஆனால் சூக்கும சரீரமும் பொய்யென்று விலக்கப்பட்டிருக்கின்றது. சுழுத்தி அவஸ்தையால் உலகமே பொய்யாகவும் ஆன்மாவும் பிராணனுமாய் இருதயத்தில் நின்று மயக்கத்தோடு சுகமான நித்திரையை அனுபவிக்கிறது. அதில் மயக்கம் பொருந்தியிருப்பதாலும்

ஆத்மாவை அறிய அனுபோக ஞானசக்தி யில்லாத தனாலேயும் இதை மூடச் சுழுத்தியென்றும் காரண சரீரம் நிச்சயமில்லை யென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. சத்து, சித்து ஆனந்தமாயும் திரிகாலங்களையும் அறியக்கூடிய பிர்ம ஞானிகளுக்குமட்டும் நனவு சுழுத்தியெனும் துரியநிலை தோன்றும். இதுகாரணகுரு உபதேசத்தினாலும் ஜென்மாந்திர சுகிர்தத்தினாலேயும் நாராயண சிந்தத்வ சதாவிசாரத்தினாலேயும் திரிபுவனங்களிலும் ஒருவன் ஞானி உண்டென்று வேதவாக்கிய மிருப்பதால் அவரைக் கைப்பிடிக்கிறவர்களுக்கு நனவு சுழுத்தியெனும் துரியநிலை தோன்றும். அவரை சற்குருவென்று யாவரும் வணங்கலாம். அவராலே சொல்லப்படும் சமாதியோகம் இவ்வளவு பெருமையுடையதென்று அவராலும் சொல்லவொண்ணாது. ஆகையால் நாம் இளமையிற்றானே முயற்சி செய்தல் அவசியம். முதுமையில் அறிய இயலாது.

---

## 11-வது அத்தியாயம்.

## சமாதியோகம்.

---

மேலே சொல்லியவை கேட்டு ஆனந்தத்தில் மூழ்கிய சிஷ்யன் திரிபுடியையும் தேகத்திரயத்தையும் பந்தப்பின்னலையும் நான்கு சாதனமெனப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் இவற்றையெல்லாம் கடந்து மோனமுடிவாயிருக்கும் குருநாதனை வணங்கி உட்பற்று வெளிப்பற்றுகளைப் போக்கி சுத்தமனதுடையவனாய் குருவை "கரும்பே, கரும்பின்ருசியே, கற்கண்டே, சீனியே நருங்கனியே, முப்பழத்தின் சுவையே, தேனே, கற்பகமே, திகட்டாத மதுரமே, பேரானந்த முகிலே, என் ஆண்டவனே, என் இனிய தோழனே, என் உயிரே" என்று பேரானந்தத்துடன் தொழுது கை கூப்பினவனாய் பின்வருமாறு சொல்லத் தொடங்கினான்.

"பூதலய மாகின்ற மாயை முத லென்பர்சிலர்
பொறிபுல னடங்குமிடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம்
போனவிட மென்பர்சிலபேர்

நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர்
நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலருருவ மாமென்பர் சிலர்கருதி
நாடிலரு வென்பர்சிலபேர்
பேதமற உயிர்கெட்ட நிலையமென் றிடுவர்சிலர்
பேசினரு ளென்பர்சிலபேர்
பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர்சிலர்
பிறவுமே மொழிவரிவையாற்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலாற்
பரமசுக நிஷ்டைபெறுமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே."

"பஞ்சினில் வழித் தீப்போற் பலசென்ம விவித வித்தாம்
சஞ்சித வினையை ஞானத் தழல்சுட்டு வெண்ணீறாக்கும்
கிஞ்சிலா காமியத்தான் கிட்டாது விட்டுப் போகும்
விஞ்சிய பிராரத் வத்தின் வினையனு பவித்துத் தீரும்"

"சஞ்சலமற் றகண்டபரி பூரணமாய்ச் சிதாகாய மாவ தன்றோ சமாதியோகம், உஞ்சலெபெற் றலைவதுதன் சுபாவ மாயில் ஒருகணத் தில் பலஉலகா உதிக்குமிந்த, நெஞ்சகவஸ் துவில் அசையா நிலைபெ றுவ தெப்படியோ நீர்சொல் வீரே."

என்றுவினவிய சிஷ்யனுக்கு குருவானவர் அப்பா! மனதுக்குச் சத்துவம், ரசம், தமம் எனும் குணங்கள் உண்டு. களங்க மற்றது சத்துவம், இருட்டு தாமசம். மறுக்கம் ராசதம். இதையறிந்து தள்ளப் புகுந்தால் தாமச மிரண்டும் இற்றுப்போம். பகவத் கிருபை யென்ற மழையினால் சத்துவம் தழைத்து வளரும். மனமே சத்துவ ரூபம், மற்ற இரண்டு குணங்களும் சேர்க்கையால் சேர்ந்தது, சத்வமாகிய மனது பிரமத்தில் அடங்கியிருக்கும் காலம் முழுவதும் மாயையைவிட்டு நீங்கியதாம்.

இன்னும் இடைக்காடர்

ஒன்றைப்பிடித்தோர்க்கே பசுவே உண்மை வசப்படுமே
நின்றநிலைதனிலே பசுவே நேர்மை யறிவாயே

என்பதாலும் அறிக. இன்னும் சமாதியில் சலனமும் நாமமும் இன்றி இருப்பதுபோலவே களங்கமற்ற ஆகாயம்போல சித்தம் சிதாகாயவடிவாய் நிற்கும். இவர்களைக் கூடஸ்தப்பிர்மம் என்று சொல்லப்படும். இப்பொருள் எப்படிப்பட்ட பொருள் என்று அடியில் வரும் பாட்டினுல் அறிக.

அறியும் பொருளன்று அறியாப் பொருளன்று
அறிவாய நீயெனு மப்பொருள்தான் பொறியின்
வழிநின் றறியும் பொருளன்று போதக்கண்
விழித்தறி யும்பொருளே.

காத்திரள் நிற்பினும் அப்பொருளைக்
காணக்கிடையாது—அதுகையறவே
மரணப்படினும் அதுகண்டு கொள்ளும்
வழியில்லை யெனநீ அறியே.

---

## 12-வது அத்தியாயம்.

# தொண்டர் பெருமை.

---

சிவனைப்பணிந்து நடக்கும் மகான்களே தொண்டர் எனப்படுவர்.

பாட்டுகள்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து தரணியொடு வானளத் தருவரேனும், மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம் மாதேவர்க்கேகாந்த ரல்லா ராகில், அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில் அவர்கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே. (1)

பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்
கரியமா லோ அலை கடலிற் றுயின்றோன்

அலைகட லோகுரு முனிகையி லடக்கம்
குருமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கோர்தலைப் பாரம்
அரவோ பார்வதி சிறுவிரல் மோதிரம்
உமையோ இறையவர் பாகத்தி லொடுக்கம்
இறையவரோ தொண்டருள் அடக்கம்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே.

---

## சேக்கிழார் பாடிய தொண்டர் பெருமை.

ஆரங் கண்டிகை யாடையும் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலா
ரீர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ.
கேடு மாக்கமும் கேட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒப்பவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

---

## அப்பர் கூறிய பெருமை.

ஆரூர் அவிர்சடையான், தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே.

## சம்பந்தர் பாடிய பெருமை.

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே.

---

## சுந்தரர் பாடிய பெருமை.

பூத்தாராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன். (இன்னும் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையாலேயும் அறிக.)

## மாணிக்கவாசகர் பாடிய பெருமை.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

---

## தாயுமானவர் பாடிய பெருமை.

கண்ணு னின்ற வொளியைக் கருத்தினை
விண்ணு னின்ற விளங்கிய மெய்யினை
யெண்ணி யெண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்றொழுந் தெய்வமே.

---

## சிவஞான போதத்திற் கூறி யிருக்கும் பெருமை.

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்ம லங்கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே.
அன்பர்க ளெல்லாம் அருள்ஓங்கி வாழ்க
உம்பர்பிரான் வாழ்க உயர்ந்து.

---

## 13-வது அத்தியாயம்.

## கணபதி கண்ணிகள்.

---

ஓங்கார மாகி ஒளிக்குளொளி யாகியென
தாங்கார மெல்லாம் அழிப்பாய் கணபதியே. (1)

அறிவிற் பெருவெளியாய் ஐம்புலனுக் கோரொளியாய்
கருவிலுரு வாயிருக்கும் கண்ணே கணபதியே. (2)

வருவா யருள்புரிவாய் மாய்கை தனையொழிப்பாய்
தருவா யுனதுமலர்த் தாளே கணபதியே. (3)

தாளே தருவாய் தலையின்முடி மேற்றரித்து
ஏழை கவிதீர்ந் திருப்பேன் கணபதியே. (4)

இருப்பே னுனதுடைய இருதாளைக் கைப்பிடிப்பேன்
அறுப்பா யெனதுவினை யையா கணபதியே. (5)

போதுமையா பட்டசளம் புழுக்கூ டெலெடுத்து
ஏதுசெய்வே னையா எளியேன் கணபதியே. (6)

ஏதுசெய்வே னிந்த இடர்க்கிணற்றில் வீழ்உடலை
வாதுசெய்கி றார்தசவர் வருவாய் கணபதியே. (7)

வாதுசெய்யும் வஞ்சியர்கள் மாய்கை யெனுமயக்கச்
சூது தனையறுக்கச் சொல்வாய் கணபதியே. (8)

சூதான பொய்யுடலின் சூட்சி தனைஅறிய
ஆதர வாயெனக்கு அருள்வாய் கணபதியே. (9)

ஆதார மற்றஉடல் அழிந்துபோ முன்னாக
வேதாந்த ஞானம் விளம்பாய் கணபதியே. (10)

அழியு முடலம் அழிந்துபோ முன்னாக
வழிசொல்ல வென்முன் வருவாய் கணபதியே. (11)

ஓடித் திரிந்து உழன்றுமனம் புண்ணாகி
வாடியலை யாமுன் வருவாய் கணபதியே. (12)

எண்ணியெண்ணி யேநான் எந்நேர முந்துதிக்கக்
கண்ணார நீவருவாய் கண்ணே கணபதியே. (13)

கண்ணாரக் கண்ட கன்மமெல்லாம் தீர்வதற்கு
எந்நாளும் என்முன் இருப்பாய் கணபதியே. (14)

ஆசைவலை தன்னில் அகப்பட் டுழலுகின்ற
பாச வினையறுக்கப் பாராய் கணபதியே. (15)

மாயை மயக்கொழிந்தால் மற்றொன்றை நாடுவனோ
ஆசை யொழிய அருள்வாய் கணபதியே. (16)

ஆசை யொழித்தே ஐங்கரநிற் காணாத
தோஷிபோல் நின்று சுழன்றேன் கணபதியே. (17)

மூலாக் கினிகொளுத்தி மூட்டிவெளி மண்டபத்தின்
பாலைக் கறந்துண்ணப் பாராய் கணபதியே. (18)

எண்சாண் பனங்கள் இறக்கிநான் உண்பதற்கு
நெஞ்சார நீவருவாய் நித்தம் கணபதியே. (19)

கள்ளிறக்கி யுண்டு கவலை தனையொழிக்க
அல்லலற்ற வாசி அருள்வாய் கணபதியே. (20)

வாசி வழியறிந்து வருநமனை வெல்வதற்குத்
தேசிகனே யென்வினையைத் தீர்ப்பாய் கணபதியே. (21)

காலை மறவாமற் கண்டேங்கி நில்லாமல்
வேலைவழி காட்டி விடுவாய் கணபதியே. (22)

நாசிநுனி வட்டம் நடுவே திருநடனம்
வாசிமே லேற்றியென்னை வைப்பாய் கணபதியே. (23)

இருகா லசையாமல் இயங்கும் சுழிமுனையில்
உருகா அருகிநிற்க உரைப்பாய் கணபதியே. (24)

விந்து விருந்து விளங்கும் தலந்தனிலே
நந்தி யருகிலென்னை நாட்டாய் கணபதியே. (25)

ஆத்தாளெனையீன்ற அபிராமி வள்ளிமுகம்
பார்த்தே விருந்துபசி தீர்ப்பேன் கணபதியே. (26)

குண்டலி சத்தி கோதைஅபி ராமிதம்மைக்
கண்டாற் கலிதீரும் கண்ணே கணபதியே. (27)

அண்டமெல்லாம் தானாகி ஐவருக்கும் தாயானைக்
கண்டாற் கலிதீரும் கண்ணே கணபதியே. (28)

தூங்காமற் றூங்கித் தொழுது கரம்குவிக்க
ஆங்கார மெல்லாம் அறுப்பாய் கணபதியே. (29)

பெண்ணாசை பொன்னாசை பூமியெனும் ஆசையெல்லாம்
உன்னாசை யால்வெறுக்க உரைப்பாய் கணபதியே. (30)

பிறவி தனையொழித்துப் பேரின்ப வீடடையைத்
அறவு தனையெனக்குச் சொல்வாய் கணபதியே. (31)

நவகோணத் துள்ளிருக்கும் நாரணியாள் தன்னருளால்
பவமறுக்க வென்னைமுகம் பார்நீ கணபதியே. (32)

ஆசையகில் கேணி அறிவழிந்து வீழுகின்ற
பாச வினையகலப் பாராய் கணபதியே. (33)

“ (கணபதிக் கண்ணி மட்டும் நரசிம்ம யோகியால் கூறப்பட்டது.”)

---

## 14-வது அத்தியாயம்.

## நாராயணமாலை.

---

ஓங்கார மாகி யுயர்ந்த வெளியாகி
ஆங்கார மில்லாமல் அமர்ந்ததிரு நாரணனே (1)

அன்பே அறிவே யறிவில் விரிவாகும்
இன்பவெள்ள மாக எழுந்ததிரு நாரணனே. (2)

வருவா யருள்புரிவாய் மயக்கமதைத் தீர்த்தருள்வாய்
தருவா யுனதுதிருத் தாமரைத்தாள் நாரணனே. (4)

தாளைத் தருவாய் தலையின்முடி மீதணிந்து
ஏழை கலிதீர்ந்து இருக்கவென்று நாரணனே. (5)

இருப்பேனு னுன்னுடைய இருதாளைத் தஞ்சமென்று
அறுப்பாயென் பாசவினை ஐயதிரு நாரணனே. (6)

அரியென்ற பேர்படைத்த ஆதிப் பரம்பொருளே
சரியாகக் காப்பாயே சற்குருவே நாரணனே. (7)

போதுமையா போதுமிந்தப் புவிமீதிற் பட்டதுயர்
வாதுசெய்கி றோர்தசவர் வருவீரே நாரணனே. (8)

இன்பமே தேனே இனிய பழச்சுவையே
துன்பமே யில்லாத சுடர் விளக்கே நாரணனே. (9)

சித்தை யறிந்தருளுஞ் சீலனே யென்குருவே
சத்தை யறியும்வகை சாற்றுவீர் நாரணனே. (9)

யேகா க்ஷரமதனை யெட்டியே கிட்டுதற்கு
வாகா யெனக்கு வரமருளும் நாரணனே. (10)

போதுமையா போதுமிந்தப் புழுக்கூடு நானெடுத்தல்
வாதுசெய்கி றார்நமனார் வருவீரே நாரணனே. (11)

கண்ணாரக் கண்ட கவலையெல்லாம் நீக்குதற்கு
எந்நேர மென்முன் இருப்பீர்நீர் நாரணனே. (12)

பொன்னாசை பெண்ணாசை பூமியெனும் ஆசையெல்லாம்
நின்னாசை யால்வெறுத்து நிற்கஅருள் நாரணனே. (13)

ஒளியாய்ப் பரஞ்சுடரா யுருவா யுலகனைத்தும்
தெளிவாய் விளையாடும் தீரனே நாரணனே. (14)

ஆற்றோடு தும்பையணி அம்பல வர்ணனையான்
போற்றித் தொழுதுநிற்கப் பொருந்துவீர் நாரணனே. (15)

ஐந்துகரத் தோனை அல்லலற்றுப் போற்றுதற்குப்
பைந்துளப மார்பா பணித்தருளும் நாரணனே. (16)

ஆறுமுகத் தோன்றன் அடியிணைகள் போற்றிசெய்யத்
தேறுதலை யென்றனுக்குத் தெரிவிப்பீர் நாரணனே. (17)

சத்திதன் பாதம் சரியுடனே போற்றுதற்கு
முத்தி யெனக்கருளும் முகுந்தாநீர் நாரணனே. (18)

நெஞ்சமென்ற கல்லை நேராய் விளக்கின்ற
தஞ்சமென்றோ ரைக்காக்கும் சற்குருவே நாரணனே. (19)

அண்டமெல்லாம் தானாகி அப்புறத்தி னின்றஉனைக்
கண்டு களிக்கக் கருணைகூர் நாரணனே. (20)

மாயை யொழிவதற்கு மருந்துளதோ நின்னையன்றி
வாய்மெய்மன தாற்றுதித்தேன் வருகுவீர் நாரணனே. (21)

ாசிக ளெல்லாம் துடைத்துப்பரி சுத்தமதாம்
ாசிமே லேற்றி வைப்பீரே நாரணனே. (22)

த்தா ளுனையீன்ற அங்கயற் கண்ணிமுகம்
ர்த்துத் தொழுதிருந்தாற் பசிவருமோ நாரணனே. (23)

பூமலர்மேல் இச்சைகொண்ட பொன்வண்டு போலாகத்
தாள்மலர்மே லிச்சை தவிரேனன் நாரணனே. (24)

காமாக் கினியில்வெந்து கதறி யலையாமற்
சோமாக் கினிவழியைச் சொல்லுவீர் நாரணனே. (25)

நந்தா முகுந்தா நரசிம்மா வென்குருவே
வந்தா தரித்து வசமருளும் நாரணனே. (26)

பத்து அவதாரம் பரிவாய் எடுத்தவனே
முத்துக குடைபிடித்த மூலனெனும் நாரணனே. (27)

அம்பிகை பாதம் அன்புடனே யான்போற்ற
நம்பிக்கை யாய்ஞானம் நவிலும்வீர் நாரணனே. (28)

ஆங்கார மற்ற அறிவான அன்பருக்கே
நீங்காமல் வந்து நிலைப்பீர்நீர் நாரணனே. (29)

பூமி யளந்தருளும் புண்ணியனே நின்பதத்தைச்
சாமி யெனத்துதிப்பேன் தற்காப்பீர் நாரணனே. (30)

எனக்குப் பதந்தான் இன்பமாய்த் தான்தருக
உனக்கு மனந்தான் உருகாதோ நாராணனே. (31)

இருவினைகள் வந்தென்னை இடுக்கண்கள் செய்யுதையா
திருவடியைத் தாரும் திரவியமே நாரணனே. (32)

சொன்னதெல்லாம் கேளாதோ தொலையோ பகருமையா
அன்ன நடைத்திருவின் அன்பேநீர் நாரணனே. (33)

தாய்போல வந்து தமியேனைக் காவாயேல்
பேய்போல நின்று பிதற்றுவேன் நாரணனே. (34)

அஷ்டா க்ஷரத்தில் அமர்ந்துநிற்கும் மாதவனே
கஷ்டமெல்லாம் தீர்த்துக் கருணைசெயும் நாரணனே. (35)

அரிரா கவனே அன்புடனே போற்றுகிறேன்
கிரியைக்குடை யாய்ப்பிடித்த கேசவா நாரணனே. (36)

வாரும் ஹரியே வந்தெனைநீர் காப்பீரே
ஆரு துணையெனக்கிங் கையாவோ நாரணனே. (37)

என்னைநீ ராளா திருப்பதுவும் ஏனோதான்
கண்மணிநீ சொல்லாய் கருத்துள்நிறை நாரணனே. (38)

தாசரதியே தயாபரனே யென்குருவே
பாசமறச்செய்யும் பதிநீரே நாரணனே. (39)

ஆலிலையிற் பள்ளிகொள்ளும் அப்பனே எற்குமருள்
பாலிக்கப் போகாதோ பண்புடைய நாரணனே. (40)

சாலஞ்செய் யாமலே மூலமென்ற அக்ஷரத்தை
ஒலமிட் டேயழைத்தால் ஓடிவரும் நாராணனே. (41)

அருமறையிற் கூறுகின்ற அமிர்தமெனு மாதவனே
திருவுறையு மார்பாவென் தெய்வமே நாரணனே. (42)

தப்பிதங்க ளில்லாமல் தமியேனை யாள்வீரே
அற்புதமே நானுன் னடிமையையா நாரணனே. (43)

மனதின் குறைநீக்க வாருமிந்த ஏழைதன்னைத்
தனதுபணிக் காக்கவிந்தத் தாமதமேன் நாரணனே. (44)

தீவினையைத் தீர்க்கத் திரவியமே நீவருவாய்
பாவினையெல்லாம் பறந்துவிடும் நாரணனே. (45)

பாவியென்றே யென்னைப் படுகுழியிற் றள்ளாதீர்
ஆவி விடுமுன் அருள்புரிவீர் நாரணனே. (46)

சங்கதனைத் தங்கென் தந்தை பிணியொழித்து
மங்காமற் காத்தவனே வாமனு நாரணனே. (47)

முன்னேநின் சன்னியத்தை மூருந்தா என்க்களித்துப்
பின்னே யதைமறைத்துப் பேதித்தீர் நாராணனே. (48)

தப்பிதங்க ளில்லாமல் தயவுடனே நீராள்வீர்
ஒப்பி லடங்காத உயர்மணியே நாரணனே. (49)

ஆலமென்ற வெங்கரா வாய்ப்பட் டழன் றழன்று
மூலமென்ற யானைதனை முன்காத்த நாரணனே. (50)

ஆசை யகற்றி அன்புடனே யான்போற்ற
நேசித்தே னுன்னை நிருவிகற்ப நாரணனே. (51)

நான்குமுகத் தோனை நாபியிலே பூத்தருளும்
பாங்காம் பரஞ்சுடராம் பண்புடைய நாரணனே. (52)

அஷ்டா க்ஷரத்தை அன்புடனே எந்தனுக்கு
இஷ்ட முடனுரைத்த என்குருவே நாரணனே. (53)

வான்மண் அனல்அனில மாய்விளங்கும் உன்பத்தில்
பூண்போட்டு என்மனதைப் பொருந்துவனோ நாரணனே. ()

சாகாமல் நான் வாழ்ந்து சரியுடனே போற்றுதற்கு
ஆகாமற் போவேனோ அறியேனே நாரணனே. (55)

மறையிலுமே காணாத மாதவனே உன்னைத்தான்
முறையினாற் காண்பேனோ முன்னவனே நாரணனே. (56)

சித்திமுத்தி யெல்லாம் சீராய் அளிப்பவனே
புத்தி எனக்கருளும் போதனே நாரணனே. (57)

உன்னைத் துதித்து உளமுருகி வாடுபவர்
என்னதவம் செய்தாரோ என்னறிவே நாரணனே. (58)

மராமரா வென்றவனை மாமுனியாய்ச் செய்தவனே
நரசிம்ம ரூபாஎன் நட்பேழும் நாரணனே. (59)

மச்ச வடிவெடுத்த மாயோனே வாருமையா
சொச்ச வினையொழித்துச் சுகந்தருவீர் நாரணனே. (60)

இன்பக் கடலில் இனிமையாய் வாழுதற்கென்
துன்பக் கடலைத் தொலைப்பீரே நாரணனே. (61)

தஞ்சமென்று நான்தான் சார்ந்தேனே உம்மருகில்
அஞ்சலென்று கூட அருளீரோ நாரணனே. (62)

உலகத்தை யோரடியில் உயர்த்தி அளந்தவரே
கலகக் கடலதனைக் கடப்பதென்றோ நாரணனே. (63)

ரங்க [illegible]டர்தீர்த்து இன்னருள் தந் தாளவென்றே
[illegible]ர் துகாக்கின்ற வளர்பிறையே நாரணனே. (64)

உள்ளபடி யுன்னை யுணர்ந்தே யறிவதற்குக்
கள்ள மனமகற்றிக் காண்பேனோ நாரணனே. (65)

அற்ப சுகத்தில் அலைந்தே திரியாமல்
தற்பரனே யுன்றனிரு தாள்பணிந்தேன் நாரணனே. (66)

உருவா யிருக்கும் உத்தமனைக் காணேனே
வருவாய் குருவாய் மாதவனே நாரணனே. (67)

வெளித்துறவு கொண்டு வெம்பி யலையாமல்
சுழுத்தி வகையறியச் சொல்லுவீர் நாரணனே. (68)

அறிவெல்லாம் நின்பால் அன்புடனே போட்டுவிட்டுச்
சரியுடனே வாழ்வேனோ சமர்த்தரே நாரணனே. (69)

கருங்கடலிற் பள்ளிகொள்ளும் கார்நீல வண்ணரே
தருவைப்போல் காருண்ய தபசியே நாரணனே. (70)

சத்துவத்தில் சத்துவமாய்ச் சார்ந்திரு மாதவனே
சித்தெல்லாம் ஆடும் ஜெகத்குருவே நாரணனே. (71)

உண்மை யளிக்கும் உத்தமனே யென்குருவாய்
நன்மை யளிக்கும் நண்பனே நாரணனே. (72)

செம்மலரில் வீற்றிருக்கும் செந்தா மரைத்திருவே
உம்பதத்தைக் காண உரைப்பீரே நாரணனே. (73)

பாதத்தைப் போற்றி யன்புடனே நான்றாகித்துப்
பூசித்துப் போற்றிப் புகழ்வேனோ நாரணனே. (74)

கள்ளரைப்போற் காலர் கடிட்டனே வந்தாக்கால்
உள்ளந் தெளிய உரைப்பீரீர் நாரணனே. (75)

பந்த மெனும்வலையிற் பலகாந்தான் சிக்கிடினும்
வந்து வினையறுப்பீர் வல்லவனே நாரணனே. (76)

பாசமெல்லாம் போக்கிப் பணிந்து அடிபணிய
ஆசை யெனக்கு அருள்வீரே நாரணனே. (77)

வேடிக்கை யுஞ்சொகுசும் விளையாட்டு மெய்யெனவே
ஆடித் திரிந்து அலைந்தேனே நாரணனே. (78)

உனக்கடிமை யாகி உள்ளன்பு செய்தேனே
எனக்காக எப்போது எதிர்வருவாய் நாரணனே. (79)

நாவினு லேயோக்கி நாராய ணவெனவே
பாவித்துப் போற்றிப் பணிவேனோ நாரணனே. (80)

வஞ்சக மாகநமன் வருவதற்கு முன்னுகப்
பஞ்சமலர் தூவிப் பணிவேனுன் நாரணனே. (81)

ஆதியா யந்தமுமா யப்பாலும் மேலான
சோதிமய மாய்விளங்கும் சுந்தரா நாரணனே. (82)

உயிரெல்லாந் தானு புகந்துநின்ற மாயவனே
தயிர்வெண்ணெ யெல்லாம் தாமுண்ட நாரணனே. (83)

என்று மிருப்போமென் றேமாப்புக் கொண்டேதான்
மன்றுடல் அன்பர் வழக்கமோ நாரணனே. (84)

இடமும் பொருளும் இல்லாளும் சுற்றமெல்லாம்
உடலழியும் போது உடன்வருமோ நாரணனே. (85)

ஊற்றைச் சடலத்தை உப்பிட்ட பாண்டமதை
எற்றுத் திரிந்துவிட்டேன் என்செய்வேன் நாரணனே. (86)

அன்னைதந்தை யெல்லாம் ஐயனே நீர்தானே
என்னைவந்து காப்பாயே என்னறிவே நாரணனே. (87)

கோவிந்தா வென்றுநான் கூவுவதும் கேளாதோ
பாவமதை நீக்கியருள் பாலிப்பாய் நாரணனே. (88)

அதிபிரி யத்துடனே அன்புசெய்து வந்தாக்கால்
கெதியும் கொடுப்பாயே கேசவனே நாரணனே. (89)

அச்சமுற்றுப் பாழ்நரகில் அடியேன் அழுந்தாமல்
பக்ஷம்வைத்துக் காக்கின்ற பரனேஓ நாரணனே. (90)

ஊழ்வினைகள் வந்தென்னை உளமுருகச் செய்யுதையா
எழைகலி தீர்ப்பாயே இன்பமுள்ள நாரணனே. (91)

அறியாத என்னை அல்லலிலே தள்ளுவது
சரிதானோ ஈதுமக்குச் சாத்மீக நாரணனே. (92)

அம்புவியி லேயெடுக்கும் அரும்பிறவி யைமாற்ற
[illegible]னை யுன்னைத்தான் நல்லருள்செய் நாரணனே. (93)

கண[illegible]ரைக் கண்ட கவலையெல்லாம் தீரவருள்
விண்ணுரு வாக விளங்குதிரு நாரணனே. (94)

ஆருமற்ற பாவியைநீர் ஆற்றில்விட லாமோதான்
தேருதலா யுதவி செய்விப்பீர் நாரணனே. (95)

அக்கரியைப் பற்றும் அகோர முதலையையும்
சக்கரத்தை விட்டன்று சங்கரித்த நாரணனே. (96)

வஞ்சக் கௌரரிடம் அடுப்பட்ட துரௌபதையின்
சஞ்சலங்கள் தீர்த்துவைத்த சமர்த்துள்ள நாரணனே. (97)

இனிப்பிறவி தன்னில் எதுவாகி லுமெனக்கு
இனிப்புண்டோ சொல்லும் இனியனெனும் நாரணனே. (98)

வேத முடிவிலுமே விரைந்துமே காணாத
பாதந் தனைக்காணப் பற்றினேன் நாரணனே. (99)

கார்நீல முள்ளவனே கண்ணுதலின் மைத்துனே
கார்போற் கருணைசெய்யும் காருண்ய நாரணனே. (100)

பாதியுடல் ஈசனுடன் பகிர்ந்து எடுத்தவனே
ஆதியாய் நாதமுமாய் அமர்ந்ததிரு நாரணனே. (101)

ஐயோ அனியாயம் ஆருமற்ற பாவியென்னை
வையகத்தார் தான்இகழ வைப்பாயோ நாரணனே. (102)

மண்ணாசை பொன்னாசை மற்றதெல்லாம் பொய்யாச்சு
உன்னாசை மட்டும் உண்மைகாண் நாரணனே. (103)

அறிஞருடன் கூடி அடிமைத்தொழில் செய்யாமல்
வெறிஞருடன் கூடி வெம்பினேன் நாரணனே. (104)

சிவகா ருண்யமெனும் சிந்தையே யில்லாமல்
பாவத்துக் காளானேன் பாக்கியமே நாரணனே. (105)

நல்லகுரு வைநாடி நட்புடனே போற்றாமல்
பொல்லாக் குணத்திற் பொருந்தினேன் நாரணனே. (106)

சற்குருவைப் போற்றிச் சரியுடனே வாழாமல்
மைக்குழலார் ஆசைதனில் மருண்டேனான் நாரணனே. (107)

அன்பனா யென்னைநீ ஆக்கிவிட்டாற் போதுங்காண்
இன்பத் துடன்போற்றி இருப்பேனான் நாரணனே. (108)

எட்டெழுத்து மந்திரத்தை யென்றும் துதியாமல்
துட்ட மறலிபதம் தொழுவேனோ நாரணனே. (109)

உள்ளும் புறமும் ஒருமையிலாப் பாவியென்னைக்
கள்ளனிவ னென்றுசொல்லிக் கழிப்பாயோ நாரணனே, (110)

என்ற னுயிர்க்கினிய இன்பமுள்ள நாயகனே
உன்பாத மெற்கருளும் உண்மையுள்ள நாரணனே. (111)

ஆக்கை மிகவாடி யங்கபக்த மானவென்னைத்
தூக்கி யெடுப்பதென்று சொல்லுவீர் நாரணனே. (112)

பொய்யான வாழ்க்கையைநான் மெய்யென் றிருந்தேனே
வையகம் தன்னில்வந்து வாழ்விப்பாய் நாரணனே (113)

வேஷந் தனைப்போட்டு வேடிக்கை யாய்த்திரிந்து
தோஷந் தெரியாமற் சுழன்றேனுன் நாரணனே. (114)

காசாசை கொண்டுமெத்தக் கலங்கித் தவித்தேனே
மாசா னவைபோக்கி வாழவைப்பீர் நாரணனே. (115)

மனதுசெவ்வை யானுக்கால் மாதவனைக் காண்பனென்று
சொனதுமறை யெல்லாம்நீ சொல்லுவாய் நாரணனே. (116)

வாசிக் குதிரையைநான் வசமாக்கிக் கொள்ளுதற்குத்
தேசிகனே யென்மேலே சித்தம்வைப்பீர் நாரணனே. (117)

வராக அவதாரம் வாகாய் எடுத்தவனே
உரக மதில்நடிக்கும் உயர்வுடைய நாரணனே. (118)

பத்து வயதிற் பசுமேய்த்த பாலகனே
சொத்துக் கதிபதியாம் சொர்ணமே நாரணனே. (119)

பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பாலனே அச்சுதனே
ஆர்க்கும் பெரிய அறிவுடைய நாரணனே. (120)

எவருக்கு மேலான எம்பெருமான் பூரணனே
உவமிக்க எட்டாத உத்தமனே நாரணனே. (121)

சொல்லுக் கடங்காத சுகப்பொருளே விண்ணமுதே
எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்குநிறை நாரணனே. ()

தெள்ளமுதே தேனே தெவிட்டாத வான்சுவையே
அல்லலற்றுப் போற்று மமுதமே நாரணனே. (123)

சத்தியு மானுப் சமர்த்துகளும் நீமுடித்தாய்
முத்தி எனக்கருளும் முகுந்தனெனும் நாரணனே. (124)

உலகமெலாம் காக்கும் உயர்வுடைய மூர்த்தியுநீ
திலகம்போ லேவிளங்கும் தீரனே நாரணனே. (125)

மண்டையி லுள்ள மதுவென்னும் தேனைத்தான்
தண்ணீர்போ லுண்ணத் தருவீரே நாராணனே. (126)

நின்ற நிலையிலே நேர்மையைநான் காணுதற்கு
ஒன்றைப் பிடிக்கவகை யுரைப்பாயே நாரணனே. (127)

காட்டை நினைந்து கடுகிவழி செல்லேனுன்
காட்டி லிருந்து நலமுறுமேன் நாரணனே. (128)

பண்டு நினைப்பைநீ பாழாகச் செய்துவிட்டால்
தொண்டுபண்ணி நானும் தொழுவேனே நாரணனே. (129

களங்கமற்ற புத்திதனைக் கண்டே பிடித்துவிட்டால்
விளங்கி விடுவேனே விமலனே நாரணனே. (130)

தூங்காமற் றூங்கிச் சுகமே யடைந்திருந்தாற்
சாங்கால முண்டோ சமர்த்துள்ள நாரணனே. (131)

ஓங்காரத் தைக்கண் டுருகிவழி சேராமல்
ஆங்காரங் கொண்டு அலைகின்றேன் நாரணனே. (132)

கண்மூக்கு மத்தியிலே கருதினான் பார்ப்பதற்கு
விண்ணுறவே நீயும் விதிப்பாயே நாரணனே. (133)

ஞான வரம்புகளை நன்றாக நான்தெளிய
மோன வழிகளையும் மொழிவீரே நாரணனே. (134)

தேகத் திரயத்தைக் தெளிந்த மௌனியர்கள்
யோகத்தி லுலவியும் உண்மையே நாரணனே. (135)

எது மறியா எளியேனென் தேகமதில்
ஒதுமறி வாகிநின்ற ஒருபொருளே நாரணனே. (136)

தன்னை யறிந்து கவத்தி விருப்பவர்கள்
உண்மை நினைவே உட்பொருளே நாரணனே. (137)

உள்ள மதனில் உன்பதத்தைப் பூசைசெய்தேன்
கள்ள வினையகலக் காண்பதென்றோ நாரணனே. (138)

தீபம் தைலம் திரிஎன்றும் தோற்றுதார்
தேகமே பிர்மமென்று செப்புவார் நாரணனே. (139)

நாரணனே பூரணனே நற்பதத்தைத் தருபவனே
காரணனே மாதவனே கண்ணொளியே நாரணனே. (140)

முத்தர்கள் வாழி முனிவோரும் தாம்வாழி
பத்தர்கள் வாழி பாக்கியமே நாரணனே. (141)

நாரணனீ வாழி நான்மறையும் தான்வாழி
பூமலராள் வாழி பொன்னேநீர் நாரணனே. (142)

அஷ்டாக்ஷரம்வாழி யருமறையும் தான்வாழி
இஷ்டர்களும் வாழி யிறைவனே நாரணனே. (143)

நமசிவாய வாழி நண்பர்களும் தாம்வாழி
இமையோரும் வாழி யீஸ்வரியும் வாழியவே. (144)

நாரணமாலை முற்றிற்று,

---

## 15-வது அத்தியாயம்.

# குரு ஆசிர்வாதம்.

---

மேலே சொல்லிய வண்ணமாய் உபதேசித்த சற்குரு நாதனை வணங்கி யாதொன்றும் தெரியாமல் தேகம் என்னதென்றும் தாரம் என்னுடையதென்றும் புத்திரன் நம்முடையதென்றும் சர்வத்திற்கும் கர்த்தன்யானென்றும் ஆகாமியச்சிந்தையோடு இருந்தவென்னைத் தடுத்தாட்கொண்டு என் பவப்பிணியை மாற்றி அப்ப ஈஷணாத்திரயத்தைத் தள்ளி சரீராபிமானத்தைப்போக்கி நித்யா நித்ய விவேகத்தை யுண்டாக்கி மூன்று சரீரத்தையும் காட்டி அதுவும் பொயென்று முக்குணங்களையும் அறிவித்து அதிலிரண்டு குணத்தை மித்தையாக்கி சத்துவத்தை நிச்சயமாகச்சொல்லி மனதை அறிவிற் சேர்த்து நான் நனவுச் சுழுத்தியை யறியும்படி கிருபைசெய்த மோன குருவே யான் உமக்குக் கொடுக்கக்கூடிய குருதக்ஷிணை இன்னதென்று அறியமாட்டேன். உடல், பொருள், ஆவி மூன்றையும் உமக்கே யுகந்தளித்தேன் என்று திரிகரண சுத்தியோடு பிரதட்சண சாஷ்டாங்க நமஸ்காரம் செய்த உள்ளன்போடு கூடிய சிஷ்யனை கருணா நிதிக்கடலாகிய குருநாதன் அஞ்சலியஸ்தம செய்து மேலே சொல்லியவைகளெல்லாவற்றையும் நன்குணர்ந்து பிரம சமாதி சித்தனாய் இருப்பதே மாறாத குருதக்ஷிணை யென்று குருநாதன் அருளிச்செய்தார்.

சுபமஸ்து.